சோபக்ருத் ஞு புரட்டாசி மீ
செப்டம்பர் - அக்டோபர் 2023

மலர்: 6
இதழ்: 6

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:

## SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com



ஸ்ரீ:





ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்


4, கேசவப்பெருமாள் சன்னதி தெரு,மயிலாப்பூர், சென்னை-600 004

☎2495 3799 / 4386 3747 ★ Email: svdd.mylai@gmail.com ★ Website: www.svdd.com


## அம்ருதோத்ஸவப் பத்திரிகை

**13.10.2023, வெள்ளிக்கிழமை**

சென்று மலர் பறித்து எந்நாதன் சேவடிப் போதுகந்து
நன்றென நீர் சுடர் நன் முகவாசம் இலை கொடுத்துக்
கன்னல் இலட்டுவத்தோடு அன்னம் சீடை கறி படைத்துப்
பின்னும் செவித்தவன் பாதம் பணிமின்கள் என்றனனே

ஶ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், ஆஶ்ரிதர்களை ரக்ஷிப்பதற்காக, முதலாழ்வார்கள் மூவரில் ஒருவராகிய ஸ்ரீ பேயாழ்வார் அவதார ஸ்தலமும், தூப்புல் ஸ்வாமி தேஶிகன் அனுபவித்து வரும் ஸ்தலமுமாகிய நம் மாடமாமயிலையில் ஸ்ரீஅலர்மேல்மங்கா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ஸேவை ஸாதித்து வருகிறான்.

இவ்வெம்பெருமானின் ஶதமான ப்ரதிஷ்டா தின மஹோத்ஸவத்திற்கு அங்கமாக, ப்ரதி மாதம் வெவ்வேறு உத்ஸவாதிகளை கண்டருளி ஆஸ்திகர்களை கடாக்ஷிக்கிறான். இவ்வரிசையில், **நாளது சோபக்ருத் ஞு புரட்டாசி மீ 26 உ (13.10.2023) வெள்ளிக்கிழமை, "அம்ருதோத்ஸவம்"** கண்டருளி பாகவதோத்தமர்களை கடாக்ஷிக்க திருவுள்ளம் பற்றியிருக்கிறான்.

இவ்வுத்ஸவமானது, எம்பெருமானுக்கு பல்வேறு வகையான (56 வகை) பக்ஷணங்களை அமுது செய்வித்து ஆராதிப்பதாகும்.

மேற்படி உத்ஸவத்தில் ஆஸ்திகர்கள் பெருந்திரளாக அன்வயித்து, ஸ்ரீ அலர்மேல்மங்கா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள், பேயாழ்வார் மற்றும் ஸ்வாமி தேஶிகன் க்ருபா கடாக்ஷத்திற்கு பாத்திரர்களாகும்படி ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

### கார்யக்ரமம்

| | | |
|---|---|---|
| மாலை 5.30 மணிக்கு | - | ஸ்ரீ பெருமாள், ஸ்ரீ தாயார் வாஹன மண்டபம் எழுந்தருளல் |
| மாலை 6.30 மணிக்கு | - | பக்ஷணங்கள் ஸமர்ப்பித்தல், திருவாராதநம் |
| இரவு 7.30 மணிக்கு | - | தீர்த்த, ப்ரஸாத கோஷ்டி |

R. ராகவன், R. அனந்த பத்மநாபன், R. முகுந்தன் - தர்மகர்த்தாக்கள்

*** சுபம் ***

சோபக்ருத் ஹூ புரட்டாசி மீ
செப்டம்பர் - அக்டோபர் 2023

மலர்: 6
இதழ்: 6

ஸ்ரீ:



ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

பாத்ரபத மாஸகத விஷ்ணு விமலர்க்ஷே
வேங்கட மஹீத்ரபதி தீர்த்த திநபூதே|
ப்ராதுரபவத் ஜகதி தைத்யரிபு கண்டா
ஹந்த! கவிதார்க்கிக ம்ருகேந்த்ர குருமூர்த்யா||
(ஸப்ததி ரத்நமாலிகா - 10)

பாத்ரபதம் என அறியப்படும் புரட்டாசித் திங்களில், விஷ்ணுவின் நக்ஷத்ரமான திருவோணத்தில், திருவேங்கடவன் தீர்த்தவாரி காணும் நன்னாளில், அரக்கர்களுக்குப் பகைவனான எம்பெருமானின் திருமணியாழ்வாரே, கவிவாதி-ஸிம்ஹமான வேங்கடநாதன் என்னும் குருவாய் நின்று நிகழ்ந்தார் – என ஸ்ரீகுமார வரதாசார்யரின் சிஷ்யரான, ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணன் பெருமிதப்படுகிறார்.

இவ்விதம், வைணவர்கள் இரட்டைப் பெருமிதம் கொள்ளக்கூடியதும்; மங்களம் நல்குவதுமான (பாத்ரபதம் என்றே பெயர்கொண்ட) புரட்டாசி மாதம், நேர்வது எந்நாள்? என எண்ணி நிற்கும் நமக்கு, ‘கண்ணினுள்ளன ஒக்கின்றதே’ என அநுபவிக்கும் வண்ணம், பிறந்தேவிட்டது!! ஸ்வாமி தேசிகன் வார்ஷிகோத்ஸவமென்ன; தொடர்ந்து திருப்பவித்ரோத்ஸவமென்ன ஒரே அமுத மழைதான்.

**அம்ருதோத்ஸவம்**

ஆம்; தெப்போத்ஸவத்திலிருந்து தொடங்கி அன்னகூடம்-பலோத்ஸவம்-‘கொண்டலார் அருள்மாரியோ’ என்னலாம்படியான புஷ்பயாகம் என, மாதம் ஒரு மாரி பொழியும் திரு ப்ரதிஷ்டா தின சதமான உத்ஸவத்தின் அங்கமாக, இப்பாத்ரபதத்தில் அம்ருதோத்ஸவம் கொண்டாடப்படவிருக்கிறது. இது, வடநாட்டு திவ்யதேசங்களில் ப்ரஸித்தமான சப்பன்-போக் என்பதின் மறுபதிப்பே. அன்று எம்பெருமானுக்கு, கன்னல் இலட்டுவத்தோடு அன்னம் சீடை கறி படைக்க பண்டை நான்மறை மெளலி படிந்தவர் ஆசைப்பட்டபடி, 56-க்குக் குறையாமல் பலவித திருப்பணியாரங்கள் ஸமர்ப்பிக்கப்படவிருக்கின்றன. இதன் விவரங்களைத் தனியே காணலாம்.

ஆசார்யவள்ளலான ஸ்வாமி தேசிகன் விஷயமாக சிறப்புக் கட்டுரைகள், தமிழ் மற்றும் ஆங்கிலத் தொடர்களுடன் ஆவணி மாத உத்ஸவங்களின் – முக்யமாக புஷ்போத்ஸவம் – வண்ணப்படங்களுடன் இந்த இதழ் உங்கள் கையில்.

ஸ்ரீ:

# Amruthotsavam – Nectar All Set To Flow

## FROM THE DESK OF TRUSTEES

It is with immense joy that we bring you the latest edition of Desika Sandesam. This sacred publication continues to serve as a beacon of knowledge, inspiration and unity for our vibrant Sampradaya.

Last month, there was the grand event Pushpotsavam which was celebrated with immense enthusiasm and devotion. It was not only a visual delight but also a profound spiritual experience for devotees. It served as a reminder to the divine beauty and grace of the Divya Dampathis and reinforces the importance of devotion and love in the Srivaishnavite tradition.

The Purattasi month will witness major and important festivals in the temple with the Annual Desikan Utsavam and Pavithrotsavam to be celebrated in a grand manner, as usual. The Navarathri festival begins at the fag end of Purattasi this year, as also the 10-day Peyazhwar Utsavam.

With full support of the Devotees, in the last six months, we have successfully organised the Plavothsavam, Laksharchanai, Thiru-Kalyana Utsavam, Brundaranya Kshetra Vijayotsavam, Phalotsavam and Pushpotsavam, as part of the Prathishta Dina Sathamana Utsavam celebrations. What Next!

For this Purattasi month, we have planned to conduct a special event called Amruthotsavam, for the first time in our temple, on Oct. 13, 2023 (Friday), at 5.30 p.m. This occasion will see 56 items, mainly sweets, offered to Sri Alarmelmanga Sametha Sri Srinivasa Perumal.

Amruthotsavam, as we have coined, is the equivalent of Chappan Bhog being celebrated in the temples of the Northern parts of the country, like Vrudnavan, Mathura, Dwaraka, etc., wherein food items and sweets numbering 56 (Chappan) are offered to Lord Krishna, especially during Govardhan Puja or Janmashtami. It is not just a culinary offering but also a symbol of devotion and the willingness to share one's bounty with the divine. It is an expression of gratitude, humility and the desire to establish a close connection with the deities.

If you are wondering why the number of Prasadams is 56, not one more or less, this is the story behind it. The farmers of Vrundavan used to offer rich food to Indra, the god of storm and rain, so that he would remain happy and bless them with timely rainfall and a good harvest. Little Krishna found this practice to be unfair to the farmers and told them to stop the custom. The lack of a luxurious feast made Indra angry and he sent torrential rains to the small villages in and around Vrundavan. The rains continued for days and resulted in a severe flood.

To save people from drowning, Lord Krishna called everyone to Govardhan Hills and lifted it on this little finger so that everyone can take refuge under it. He stood still holding the mountain for seven days until Indra realised his mistake and stopped the rain. During these seven days, Lord Krishna did not have a single grain of food. It is said that he usually had eight dishes every day. Therefore, at the end of the seventh day, people of Vrundavan prepared 56 dishes (8 dishes x 7 days) and offered them to Lord Krishna, as an expression of gratitude.

We request all to participate and have the blessings of Divya Dampathis by participating in the Amruthotsavam. Those devotees, who are willing to contribute for this unique event, may contact the Devasthanam office for more details.

In conclusion, we extend our heartfelt thanks to each one of you for your unwavering devotion and support.

# சோபக்ருத் வருட புரட்டாசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஸெப்டம்பர் / அக்டோபர் | புரட்டாசி | | | | | |
| 18/9/2023 | 1 | த்ருதீயை / சதுர்த்தி | திங்கள் | சித்திரை | புரட்டாசி மாதப் பிறப்பு. தேசிகன் உத்ஸவம் 3ம் நாள். | |
| 25/9/2023 | 8 | ஏகாதசி | திங்கள் | உத்தராடம் / திருவோணம் | தேசிகன் உத்ஸவம் 10ம் நாள். காலை: ஸ்வாமி தேசிகன் மங்களாசாஸனம், இரவு: சாற்றுமுறை. | |
| 26/9/2023 | 9 | துவாதசி | செவ்வாய் | திருவோணம் / அவிட்டம் | ச்ரவண த்வாதசி. தேசிகன் கந்தப்பொடி உத்ஸவம். காலை வீதி புறப்பாடு. மாலை திருமஞ் ஜனம். விடாயாற்றி – 1 | |
| 27/9/2023 | 10 | த்ரயோதசி | புதன் | சதயம் | த்வாதசி பாரணை. விடாயாற்றி உத்ஸவம் – 2. காலை திருமஞ் ஜனம். மாலை பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம் | |
| 28/9/2023 | 11 | சதுர்தசி | வியாழன் | பூரட்டாதி | விடாயாற்றி உத்ஸவம் – 3. காலை திருமஞ்ஜனம். மாலை பவித்ரோத்ஸவம் அதிவாஸம் | |
| 29/9/2023 முதல் 5/10/2023 வரை | 12 முதல் 18 வரை | | | | பவித்ரோத்ஸவம். காலை ஹோமம். மாலை பெருமாள் தேசிகன் வீதி புறப்பாடு. இரவு ஹோமம் | |
| 6/10/2023 | 19 | ஸப்தமி / அஷ்டமி | வெள்ளி | திருவாதிரை | காலை தாயார் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை உள் புறப்பாடு | ஸ்ரீ S. அருண் |
| 7/10/2023 | 20 | அஷ்டமி / நவமி | சனி | புனர்வஸு | ஸ்ரீ ராமர் திருமஞ்ஜனம் | |
| 8/10/2023 | 21 | நவமி / தசமி | ஞாயிறு | புஷ்யம் | திருமால்வடை | |
| 9/10/2023 | 22 | தசமி | திங்கள் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 10/10/2023 | 23 | ஏகாதசி | செவ்வாய் | ஆயில்யம்/ மகம் | காலை பெருமாள் உத்ஸவர் திரு மஞ்ஜனம். மாலை வீதி புறப்பாடு | ஸ்ரீ S. அருண் |
| 11/10/2023 | 24 | த்வாதசி | புதன் | மகம் / பூரம் | ஸ்ரீ திருமழிசைப்பிரான் | |
| 12/10/2023 | 25 | த்ரயோதசி | வியாழன் | பூரம் | ஸ்ரீ ஆண்டாள் | |
| 13/10/2023 | 26 | சதுர்தசி | வெள்ளி | உத்தரம் | காலை பெருமாள் தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் உள் புறப்பாடு | ஸ்ரீ S.V.S. ராகவன் பண்ட் |
| 14/10/2023 | 27 | அமாவாசை | சனி | ஹஸ்தம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதி புறப்பாடு | ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15/10/2023 | 28 | ப்ரதமை | ஞாயிறு | சித்திரை | நவராத்ரி 1ம் நாள். காலை பெருமாள் தாயார் திருமஞ்ஜனம். மாலை பத்தி உலாத்தல் | நவராத்ரி: ஸ்ரீ V. சேஷாத்ரி |
| 16/10/2023 | 29 | த்விதீயை | திங்கள் | ஸ்வாதி | நவராத்ரி 2ம் நாள். காலை பெருமாள், தாயார் திருமஞ் ஜனம். மாலை பத்தி உலாத்தல். பேயாழ்வார் உத்ஸவம் 1ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு, பேயாழ்வார் திருமஞ்ஜனம். இரவு திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | நவராத்ரி: K.R. ஸ்ரீநிவாஸன் |
| 17/10/2023 | 30 | த்ருதீயை | செவ்வாய் | விசாகம் | நவராத்ரி 3ம் நாள். காலை பெருமாள், தாயார் திருமஞ் ஜனம். மாலை பத்தி உலாத்தல். பேயாழ்வார் உத்ஸவம் 2ம் நாள் காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு திருமஞ்ஜனம் இரவு திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | நவராத்ரி: ஸ்ரீ D. ஸுந்தரவரதன் |
| 16.10.2023 முதல் 25.10.2023 வரை பேயாழ்வார் உத்ஸவம் – 10 நாட்களும் உபயம் : ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் | | | | | | |

## புரட்டாசியில் முக்கிய உத்ஸவங்கள்

**ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம் (10 நாட்கள்)**
ஸெப்டம்பர் 16 (சனி) முதல் 25 (திங்கள்) வரை
**ஹயக்ரீவ ஆராதனம் அக்ஷராப்யாஸத் திருக்கோலம்**
ஸெப்டம்பர் 22 (வெள்ளி)
**திருத்தேர்**
ஸெப்டம்பர் 24 (ஞாயிறு)
**ஸ்ரீ தேசிகன் மங்களாசாஸனம், சாற்றுமுறை**
ஸெப்டம்பர் 25 (திங்கள்)

**ஸ்ரீ தேசிகன் விடாயாற்றி உத்ஸவம் (3 நாட்கள்)**
ஸெப்டம்பர் 26 (செவ்வாய்) முதல் 28 (வியாழன்) வரை

**திருப்பவித்ர உத்ஸவம் (7 நாட்கள்)**
ஸெப்டம்பர் 29 (வெள்ளி) முதல் அக்டோபர் 5 (வியாழன்) வரை

**மஹாளய அமாவாசை**
அக்டோபர் 14 (சனி)

**நவராத்ரி உத்ஸவம் (9 நாட்கள்)**
அக்டோபர் 15 (ஞாயிறு) முதல் அக்டோபர் 23 (திங்கள்) வரை

**ஸ்ரீ பேயாழ்வார் உத்ஸவம் (10 நாட்கள்)**
அக்டோபர் 16 (திங்கள்) முதல் அக்டோபர் 25 (புதன்) வரை

# செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன்

ஸ்ரீ உ.வே. வங்கீபுரம் நவநீதம் ஸ்ரீராமதேசிகாசார்ய ஸ்வாமி, ஒப்பிலியப்பன் ஸந்நிதி

(ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தின் 1975-ம் ஆண்டு ஸம்ப்ரோக்ஷண மலரில் வெளிவந்த வ்யாஸம்)

**1. முன்னுரை**

ஸ்ரீ தேசிக தர்சநத்தைச் சேர்ந்த நாம் அனைவரும் மேலுள்ள தலைப்புத் தொடரைத் தினந்தோறும் ஸந்நிதிகளிலும் இல்லங்களிலும் அநுஸந்தித்து வருகின்றோம். இது ஸ்ரீதேசிகன் வாழித் திருநாமத்தில் மூன்றாவது அடியின் முற்பகுதியாகும். ஸ்ரீதேசிகன் பொய்யில் பாடல்கள் பொதிந்த தமிழ் மறைகளைத் தாம் நன்கு தெளிந்து உலகுக்குப் பலவகையிலும் உபதேசிப்பவர் என்று இதன் பொருள். இப்பெருமை மற்ற ஆச்சார்யர்களினும் நம் தேசிகனுக்கே மிகப் பொருந்துமென்பதை உணர்ந்தே முற்காலத்துப் பெரியோர் இத்தொடரை வாழித் திருநாமத்தில் சேர்த்து நம் அநுஸந்தானத்துக்குக் கொண்டு வந்தனர்.

**2. பரமனை எம்மொழியிலும் போற்றலாம்**

தேசிகனுக்கு ஆழ்வார்களிடத்தும் அருளிச்செயலிலும் உள்ள ஈடுபாட்டின் மிகுதி கூறுந்தரமன்று. உலகில் மனிதர் தங்களை இன்ன வம்சத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லிக் கொள்வது போல் ஸ்ரீதேசிகன் தம்மைத் 'தமிழ் மறையோன்' என்று பெருமிதத்துடன் கூறிக் கொண்டதைக் கொண்டே அருளிச்செயலில் ஸ்வாமிக்கு உள்ள ஈடுபாட்டை நன்கு உணரலாம். வடமொழியிலன்றித் தமிழ் மொழியில் அருளிச்செயல் அவதரித்ததைப் பற்றி ஸ்ரீதேசிகன் பேசத் தொடங்கி எம்பெருமானைப் போற்றுவதாயின் எம்மொழியும் சிறந்ததே என்றும், உலகில் மஹாராஜர்களை ஏவலர்கள் எந்த மொழியில் புகழ்ந்தாலும் அரசருக்கு அது நேரிய உபசாரமாவது போல் எம்பெருமானைத் தமிழ் மொழியில் போற்றினாலும் அவன் திருவுள்ளம் உகந்தே தீருமென்றும், மேலும் அகத்திய முனிவரின் வாயிலாகத் தோன்றிய தமிழ் மொழிக்கு ஒப்புயர்வற்ற ஏற்றம் உண்டென்றும் முடிவு கூறி அருளிச்செயலின் சிறப்பை வலியுறுத்துகின்றார்.

**3. தமிழ் மறையின் சிறப்பு**

மேலும் தமிழ் மறை சுதந்திரமான முறையில் வேதமாகவும் உபநிடதமாகவும் விளங்குவதோடு வேதங்களின் அர்த்தங்களை விளக்கும் உபப்ரும்ஹண வகுப்பிலும் சேர்ந்து பிரகாசிக்கும். இந்த அம்சத்தில் இன்னும் சற்று ஆராய்ந்தால் வேதங்களின் பொருளைத் தெளிவாய் அறிவதற்கு இதிஹாஸமும் புராணமும் உதவி செய்வதற்கு மேல் மிகப் பெரியதோர் அளவுக்கு அருளிச்செயல் சிறிதும் ஐயம் எழாதவாறு வேதத்தின் ரஹஸ்யங்களை விளக்கிக் காட்டுவதால் உபப்ரும்ஹணங்களுள் தலைசிறந்து விளங்குவதாக ஸ்ரீதேசிகன் புகழ்ந்தருள்கின்றார். அருளிச்செயலை மறைகளாகவே கொண்டு சிந்திக்கும் போதும் பழமையான உபநிஷத்துக்களில் முதன்மை பெற்று விளங்குவதாகவும் அருளிச் செய்கின்றார் நம் தேசிகன்.

ஆளவந்தார் தம் ஸ்தோத்ரத் தொடக்கத்தில் தமக்கும் தம்மைச் சார்ந்தவருக்கும் தாய் - தந்தை - பெண்டிர் - புதல்வர் - மற்றும் எல்லாம் ஆழ்வாரின் திருவடியிணையே என்று புகழ்ந்த ச்லோகத்துக்கு உரையிடும்போது தேசிகன் அதன் முன்னுரையில் வேதாந்தங்களின் உட்கருத்தை மிக நன்றாய்த் தெளிவு படுத்துவதில் தலைசிறந்த ஸ்ரீ விஷ்ணு புராணத்தினும் அருளிச்செயல் மேம்பட்டதென்றும், இந்த ஸூக்தியை ஓதியதும் எம்பெருமான் உவந்து தலை குலுக்குவானென்றும், அவனிடம் மனத்தை ஈடுபடுத்தி மகிழ்விக்க அருளிச்செயல் சிறந்த ஸாதனமென்றும் முழங்குகின்றார். அமுதனாரோ எம்பெருமானாருக்கு மற்ற அனைத்தோடும் திவ்ய தம்பதிகளே அருளிச்செயல் தான் என்று பேசியுள்ளார்.

**4. அருளிச்செயலின் இனிமை**

தமிழ் மறை என்ற சொல்லே அருளிச்செயலின் இனிமையையும் சேர்த்துக் காட்ட வல்லது. தமிழ் நிகண்டுவில் தமிழ் என்ற சொல்லுக்கு இனிமையையும் பொருளாகக் காண்கின்றோம். சிறிய திருவடி பிராட்டியிடம் விண்ணப்பம் செய்ய முற்படும்போது வடமொழியில் பேசினால் இராவணன் பேசுவதாகப் பிராட்டி கருதி அஞ்சக்கூடுமென்று நினைத்து இனிய மொழியில் பேசினான் என்று வால்மீகி கூறியதற்குத் தமிழ் மொழியில் திருவடி பேசியதாகவே கருத்தென்பர் ஆராய்ச்சியாளர். இனிமையே உருவெடுத்தது அருளிச்செயல்.

ஆழ்வார் அவதரித்த திருக்குருகூரில் எங்கும் குளிர்ந்த சோலைகள். ஆழ்வார் திருவாய் அமுதச் சொற்களைப் பொழியும் தன்மையது. அவை ஈரம் நிறைந்த தமிழ் சொற்கள். அந்தத்



தமிழின் இனிய இசை பெருவெள்ளமாய் ஓடுகின்றதாம். அவ்விசையை அநுபவித்தவர்களைப் போற்றுமவர்களைப் புகழ்பவராம் ஸ்ரீமந்நாதமுனிகள். இவ்வாறு விளக்குகின்றார் அமுதனார். வேடன் ஆண் பறவையைக் கொன்றதைக் கண்ணால் கண்டதும் வால்மீகி முனிவனுக்குப் பிறந்த சோகமே ஸ்ரீமந் ராமாயண ச்லோகங்களாக வடிவு கொண்டது போல், ஆழ்வார் எம்பெருமானை நெஞ்சார அனுபவித்ததால் பிறந்த இன்பவுணர்ச்சியே அருளிச்செயலாக வடிவெடுத்ததால் செவிக்கினிய மறையாயிற்று என்கிறார் ஸ்ரீதேசிகன்.

**5. ஸகல வேத, சாஸ்த்ர ஸாரம் அருளிச்செயல்**

ஜீவாத்மா - பரமாத்மா - அவனை மகிழ்விக்கும் வழி - அவனே மோக்ஷம் தருதல் - அவனிடம் அபசாரத்தால் வரும் துன்பம் - பாகவதர்கள் பெருமை - அவர்களை வழிபடுவதால் வரும் மனவமைதி முதலிய அவசியம் அறிய வேண்டிய ஸகலமான ஸாராம்சங்களையும் ஆழ்வார் தம் ஸூக்தியில் தெளிவித்திருப்பதை ஸ்ரீதேசிகன் நமக்கு எடுத்துக் கூறுகின்றார். தாயின் கர்ப்பத்தில் குழந்தை அடங்கிக் கிடப்பது போல் அருளிச்செயலில் எம்பெருமானுடைய குணங்களெல்லாம் அடங்கியுள்ளதைக் காண்கின்றார் தேசிகன். வேதங்களோ உபநிடதங்களோ மற்ற நூல்களோ அருளிச்செயல் போல் எம்பெருமானுடைய குணங்களை நேராகக் கையில் கனியாகக் காட்டித்தர வல்லமையுடையனவாகா என்ற கருத்து ஸ்ரீதேசிகன் திருவுள்ளத்தில் ஊன்றியுள்ளது.

ஒருகால் அறிஞர்கள் பலர் ஒன்று கூடிய ஸபையில் எம்பெருமான் குணங்களைமுழுதும்காட்டவல்லநூல்ஒன்றும்தோன்றவில்லையே என்று கவலை கொண்டார்களாம். அருளிச்செயல் அவதரித்தபின் அவர்கள் மறுபடி ஒன்று கூடி அருளிச்செயலுள் அடக்கப் பின்னும் குணங்கள் இல்லையே என்று கவலைப்பட்டனராம். இப்படி முன்னோர்களின் ஓர் ஐதிஹ்யம் உண்டு. உட்கருத்து என்ன? அருளிச்செயல் அவனுடைய திருக்குணங்களை மிகத் தெளிவாய் விளக்கும் திறனுடையது என்பதுவே. இக்கருத்தைத் தான் ஸ்ரீதேசிகன், ஆழ்வாரின் பாசுரங்கள் எம்பெருமானுடைய குணக்குழுவைக் கர்ப்பத்திலே கொண்டன என்று அருளிச் செய்கின்றார். ஆழ்வார் தாமே பெரிய திருவந்தாதித் தொடக்கத்தில் அவனுடைய திருக்குணங்களைத் தம் பாசுரங்களில் போதித்து விடுவதாய்ப் பேசுகின்றார்.

ஜீவனுடைய ஸ்வரூபம் - எம்பெருமான் திருமேனி - திருக்குணங்கள் முதலியவற்றில் தெளிவு ஏற்பட வேண்டுமானால் தமிழ் மாலைகளை ஆசார்யனிடம் பக்தி ச்ரத்தைகளுடன் அத்யயநம் செய்ய வேண்டும். அங்ஙனம் நம் தேசிகன் கற்றதால் வேதங்களில் அறிய முடியாத ஸூக்ஷ்மார்த்தங்களையெல்லாம் தாம் தெளிந்து கொண்டதாய் அருளிச் செய்கின்றார். வேதங்கள் எடுத்துக் காட்டாத - வேத புருஷனுக்கும் புலப்படாத - ரஹஸ்யங்களைக் கூட அருளிச்செயலால் உணர்ந்துக் கொண்டதாகவும் சுவைப்படக் கருத்துக் கூறுவர் சிலர். அளவற்ற ஒரு அமுதக்கடல். அதை ஒருவன் அப்படியே பருக முடியுமா? அதற்காக ஓர் அல்லித் தண்டை எடுத்து அதன் துவாரத்தாலே உறிஞ்சி உறிஞ்சி இயன்றவளவுக்குப் பருகுகின்றான். அவ்வாறே எம்பெருமான் ஓர் ஆராவமுதக் கடல். அவை அப்படியே முழுதும் அநுபவிக்க இயலுமா? முடியாது. அதற்காகத் தமிழ் மொழியில் உள்ள அருளிச்செயலை அவனை அநுபவிக்கச் சாதனமாய்க் கொள்ளுகிறான். ஏன்? திருமேனி குணம் முதலியவற்றை அந்த ஸூக்தியைக் கொண்டு மெல்ல மெல்ல அநுபவித்துச் சுவை காண்கின்றான். இந்த உவமானத்தைக் காட்டுகின்றார் நம் தேசிகன்.

**6. அருளிச்செயலால் வரும் நலன்கள்**

இந்தப் பெருமைகளையெல்லாம் நினைந்தே ஸ்ரீதேசிகன், அருளிச் செயலை உலகில் உள்ள

சிறந்த வாக்குக்களின் ஸாரமெல்லாம் ஒன்று திரண்ட அமுதமொழியென்றும், அமைதியென்னும் சாந்தி ரஸத்துக்கு எல்லை நிலமாய் நிற்பதுடன் அநுபவிப்பவர்க்கும் அமைதியை அளிக்க வல்லதென்றும், ஸம்ஸார மண்டலத்தில் உள்ள துன்பங்களினின்றும் விடுபடு வதற்கு முதல் ஸாதனமென்றும், திவ்ய தம்பதிகளைக் கண்ணெதிரே காட்டிக்கொடுக்க வல்லதென்றும் வாயாரப் புகழ்ந்தருளுகின்றார்.

இவ்வாறு தமிழ் மறையை நன்கு கற்று ஸித்தாந்தத்தின் ஸூக்ஷ்மார்த்தங்களை யெல்லாம் தெளிவாய் உணர்ந்து நம்மைப் போன்றவர்களுக்கு அருளிச்செயலின் பெருமைகளையும் அதை ஓதுவதால் மோக்ஷம்வரை எல்லா நலங்களையும் விரிவாய்க் காட்டி ஸ்ரீதேசிகன் உபதேசித்த பெருமையை நினைத்து முன்னோர்கள் ஸ்ரீதேசிகன் வாழித் திருநாமத்தில் **செஞ்சொல் தமிழ் மறைகள் தெளிந்துரைப்போன்** என்ற அடியைச் சேர்த்துப் போற்றி வாழ்த்தினர்.

**7. வாழித் திருநாமத்தில் தேசிகன் பெருமைகள்**

ஸ்ரீதேசிகன் வாழித் திருநாமத்தில் இந்த அடிக்கு முன்பு உள்ள அடிகளும் பின்பு உள்ளவையும் ஸ்வாமி தேசிகன் பல்வகைப் பெருமைகளைக் காட்டுகின்றன. அவை வருமாறு - அநாதியாய் முற்றிலும் உபநிடதங்களைத் தழுவியே விளங்கி வரும் நம் தர்சநத்துக்கு வஞ்சகமாய்ப் பல தீங்குகளை விளைவித்துக் குழப்ப முயன்ற பல பிற மதங்களையும் திருவனந்தாழ்வானது அம்சமாய் அவதரித்த எம்பருமானார் தம் ஸூக்திகளாலும் வாதங்களாலும் கண்டித்தொழித்தார். பின்னும் சில மதங்கள் பல துர்வாதங்களை எழுப்பவே, ஸ்ரீ தேசிகன் அவற்றையெல்லாம் தமது ஸ்ரீஸூக்திகளால் மறுத்துத் தர்சநத்தை நிலைநாட்டி எம்பெருமானார் திருவுள்ளம் மிக உகக்குமாறு செய்தருளினார்.

எம்பெருமானுடன் பெரிய பிராட்டியும் சேதநர்களுக்கு மோக்ஷம் தருதற்கு உபாயமாய் நிற்பவள், அவளும் ஈச்வர தத்வமாயிருப்பவள்.



அவளும் எம்பெருமானைப் போலவே எங்கும் நிறைந்து நிற்பவள் என்பன போன்ற உண்மைகளையெல்லாம் ஸ்ரீதேசிகன் ப்ரமாணங்களைக் கொண்டு நிர்ணயித்து உலகுக்கு அறிவுறுத்தியதால் பிராட்டியின் விசேஷ கடாக்ஷத்துக்கு இலக்கானார்.

வாளையும் வேலையும் கையுறையாகக் கொண்டு எம்பெருமானிடம் சுருதிப் பொருளையும் செல்வப் பொருளையும் கவர்ந்து அர்ச்சையில் உள்ள ஊற்றத்தின் மிகுதியாலே மற்ற திருமேனிகளைப் புறக்கணித்துத் தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ச்சைத் திருமேனிக்கு வழங்கித் தம் அமுதமாரியான பிரபந்தங்களாலே ஸகல வேதாந்தங்களையும் பொழிந்த திருமங்கையாழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளை ஸ்ரீதேசிகன் நம் உள்ளத்துச் சேமநிதியாக இருத்தி அதன் வழியே தமது அனுபவத்தையும் கொண்டவராய் விளங்கினார்.

திருவேங்கடமுடையானது திருமணி தனது ஓசையாலே அசுரர் குழாமெல்லாம் அஞ்சியோடும்படி செய்யவல்லது. அந்த திருமணியாழ்வாரின் அம்சமாய் அவதரித்த நம் தேசிகன் நம்மிடம் வாதம் புரிய வந்த பிற மதத்திய அசுரர்களையெல்லாம் தம் நாவீறு கலந்த வாதவொலியால் புறங்காட்டி ஓடச் செய்து தாமே தம்மைக் கண்டாவதாரமெனப் பேசியருளினார். ஸம்ஸார ஸமுத்ரத்தில் ஆழ்ந்து கிடைக்கும் சேதநர்க்கு மோக்ஷம் பெற மற்ற உபாயத்தில் தகுதியின்மையால் உபநிடதம் காட்டிய எளிதான வழியான ப்ரபத்தி மார்க்கத்தைத் தம்பல ஸூக்திகளாலும் விளக்கிக் காட்டி எல்லோரும் அதைப் பற்றும்படி செய்து மஹோபகாரம் செய்தருளினார். திருவேங்கடமுடையானே உலகத்தைப் பல வழிகளிலும் வாழ்விக்கத் தமிழ் நாட்டுக்கு அணியான தூப்புலில் வந்து அவதரித்தானென்று பேசும்படி பெருமையுடன் விளங்கினார் நம் தேசிகன்.

இந்தப் பெருமைகளையே தேசிகனது வாழித் திருநாமம் தெளிவாய்க் காட்டுகின்றது. அதன் நான்கு அடிகளுள் அருளிச்செயலில் தேசிகனது ஈடுபாட்டைக் காட்டும் **செஞ்சொல் தமிழ் மறைகள் தெளிந்துரைப்போன்** என்ற மூன்றாவது அடியின் பகுதி நடு

நாயகமாய் விளங்குவது. இந்தத் தலைப்பைக் கொண்டு இந்தச் சிறு வ்யாஸம் தொடங்கியது.

**8. திருவேங்கடமுடையானது மநோரதம்**

இவ்வாறு பல்வகையிலும் நிகரற்ற பெருமை பெற்ற ஆசார்ய ஸார்வபௌமராய் விளங்கிய நம் தேசிகன் விபவதசையில் பல இன்னல்களுக்கு இடையிலும் தம் பெருமை குன்றாது வாழ்ந்து வைராக்யத்தின் மிகுதியால் புகழ் – செல்வம் – மதிப்பு முதலியவற்றில் பற்றற்று விளங்கி வந்தார். திருவேங்கடமுடையானுக்குத் தன் திருமணியின் அவதாரமாய், தான் பொழியும் கருணை மாரியைத் தம் **தயாசதகம்** என்ற சொன்மாரியில் மூழ்குவித்த ஸ்ரீதேசிகனைப் பற்றி ஓர் ஆசை எழுந்தது. அது தன் கடாக்ஷத்துக்கு முழுதும் இலக்கான தேசிகனுக்குப் புதிய ஓர் அர்ச்சைத் திருமேனியை நிருமித்துப் பரிபூர்ணமாய் ஸகல வைபவங்களையும் அநுபவிக்கும்படி செய்து தன் திருக்கண்ணால் கண்டு மகிழ வேண்டுமென்பதே.

அவரது அவதார ஸ்தலமான தூப்புலில் நெடுங்காலத்துக்கு முன் அவதரித்து விளங்கும் அருச்சைத் திருமேனி தர்சநத்தில் முடிசூடி நிற்கும் ஸ்வாமியின் பெருமைக்கு ஏற்ற வைபவங்களைச் சிறப்பாய் அநுபவிப்பதற்குச் சூழ்நிலை இடம் தருவதில்லை. இதைக் கருதிப் புதியதோர் இடத்தைத் தேடினான் திருவேங்கடமுடையான். ஓர் இடத்தையும் கண்டு விட்டான்.

**9. திருமயிலையின் ஏற்றம்**

அதுதான் திருமயிலை என்னும் புண்ய பூமி. வடபுறத்தில் திருவல்லிகேணியெனும் திவ்யதேசம். பார்த்தன் தேர் முன் நின்ற கண்ணன் குளிரக் கடாக்ஷித்துக் கொண்டே இருக்கின்றான். மேற்புறத்தில் கேசவன் தேஜோராசியாய்க் காட்சி தருகின்றான். சுற்றிலும் பக்தர்கள் வாழ்கின்றனர். திருவல்லிகேணியைப் பாடவந்த திருமங்கையாழ்வார் மயிலைக்கு வடபுறத்தில் அத்தலம் இருப்பதை மும்முறை பெருமையாகக் குறிப்பிடுகின்றார். இப்படி ஆழ்வார் திருவாயில் புகும் பெருமையையும் பெற்றுக் கொண்டது மயிலை. மேலும் பேயாழ்வார் தாம் அயோநிஜராய் அவதரிப்பதற்கு ஏற்ற இடமாக மயிலையைக் கொண்டார்.

அருளிச்செயலின் தோற்றத்துக்கு முதலில் விதையிட்டவர்கள் முதலாழ்வார்கள். 'பாட்டுக்குரிய பழையவர் மூவர்' என்று தேசிகனால் புகழப்பெற்றவர்கள் அவர்கள். அவர்களுள்ளும் பேயாழ்வாருக்குத் தனிப் பெருமை உண்டு. மற்ற இருவரும் எம்பெருமானைக் காண்பதற்குப் பாத்திரம் - நெய் - திரி - விளக்கு இவற்றைத் தேடி இவற்றின் உதவியால் பரமனைக் காணப்புகுந்தவர்கள். பேயாழ்வாரோ எம்பெருமானை எக்கருவியுமின்றியே காணப் புகுந்து, பிராட்டியை முதலில் கண்டு, 'கண்டேன், கண்டேன்' என்று தொடங்கிப் பாடியவர். இறுதியிலும் பிராட்டியின் திருவடிகளே நமக்கு எந்நாளும் சரண் என்று உலகுக்கு முடிவுரையளித்தவர். இத்தலத்தின் பெருமைக்கு இதனிலும் பெரிய சான்று உண்டா?

**10. ஸ்ரீதேசிகன் அவதரித்தல்**

இத்தலத்தில் தேசிகனுக்கென்றே ஒரு ஸந்நிதி தோன்றி அதில் அவர் அர்ச்சாமூர்த்தி பிரகாசிக்க வேண்டுமென்று திருவேங்கடமுடையான் பல்லாண்டுகட்கு முன் ஸங்கல்பித்து விட்டான். அவன் ஸங்கல்பம் உடனே செயல் படுதற்குத் தடையுண்டோ! அழகிய ஸந்நிதி உருவாகியது. தம்மைப் போலவே பிராட்டியின் பெருமையைக் குறிக்கோளாகக் கொண்ட பேயாழ்வாரிடம் அளவற்ற ஈடுபாடு தேசிகனுக்கு. அவர் அவதரித்த புனிதத் தலத்திலேயே தம்மை அர்ச்சை வடிவில் அவதரிப்பிக்க அவன் ஸங்கல்பித்ததில் தேசிகனுக்குப் பெருமகிழ்ச்சி. ஆழ்வார் பாடிய தலத்திற் காட்டிலும் அவர் அவதரித்த தலத்திற்குப் பெருமை அதிகமென்று பெரியோரும் பணிப்பர். அழகு மிக்க திருமேனியுடன் தேசிகன் வந்து தோன்றினார்.

**11. ஸ்ரீநிவாஸன் அவதரித்தல்**

இப்படி தேசிகனை அவதரிப்பிக்கும் தன் ஸங்கல்பம் தலைக்கட்டப் பெற்ற பின் திருவேங்கடமுடையான் அர்ச்சை வடிவில் அவருக்கு நடக்கும் விசேஷ வைபவங்களைத் தான் நேரில் கண்டு களிக்க திருவுள்ளம் கொண்டான். தான் மட்டும் வரமுடியுமா? பிராட்டி **இறையும் அகலகில்லேன்** என்று சொல்லிக்கொண்டு தனக்கு முன்பே புறப்பட்டுவிட்டாள். திவ்யதம்பதிகள் இருவரும் வந்து புதிய ஸந்நிதிக்குள் புகுந்து கொண்டனர். ஆனால் அது ஸ்ரீதேசிகன் ஸந்நிதியாகவே இருந்து அதில் தாங்கள் குடியேறி ஸ்ரீதேசிகனுக்கு அருள்புரிவதாகவே அவர்களின் திருவுள்ளம். ஆதலாலேயே இன்றும் **ஸ்ரீவேதாந்த தேசிகன் தேவஸ்தானம்** என்ற பெயரிலேயே நிர்வாஹம் நடந்து வருகின்றது. தேசிகன் எப்பொழுதும் அருகில் இருந்து மங்களாசாஸநம் செய்து கொண்டே இருப்பதால் ஸ்ரீ ஸ்ரீநிவாஸனுக்கு ஏற்றம். எப்பொழுதும் அவனது திவ்யகடாக்ஷத்தைப்பெற்றுக்கொண்டே யிருப்பதால் தேசிகனுக்கு ஏற்றம் என்பதாகப் பல்வேறு ஏற்றங்களுடன் இத்திருக்கோயில் என்றென்றும் விளங்கும் என்பது திண்ணம். ✻

**Sponsorships and donations towards publication expenses are welcome**

# ஸ்வாமி தேசிகனின் அவதார வைலக்ஷண்யங்கள்

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

ஸர்வசேஷியும் ச்ரிய:பதியுமான ஸ்ரீமந் நாராயணனை முதல்வனாகக் கொண்ட நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் ஆசார்ய பரம்பரையில் நடுநாயகமாய் எழுந்தருளி, அப்பரம்பரை என்னும் ஹாரத்தின் ஒரு நாயகமணியாய் விளங்கி அதற்கு மேலும் அழகு சேர்ப்பவர் ஸ்வாமி தேசிகன். இவரை திருவேங்கடமுடையானின் கண்டாவதாரமாகக் கொண்டாடுவது ஸுப்ரஸித்தம்.

*வேங்கடேசாவதாரோSயம் தத்கண்டாம்சோSதவா பவேத் |*
*யதீந்த்ராம்சோSதவேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்களம் ||*

(ஸ்ரீ தேசிகமங்களம் - 4)

என்று கொண்டாடுகிறார் ஸ்வாமியின் திருக்குமாரரான குமார வரதாசார்யர்.

இப்படி ஸ்வாமி தேசிகன் ''வேங்கடேச கண்டாவதாரர்'' என்று ப்ரதானமாகக் கொண்டாடப்பெற்றாலும் அவர் தம்முடைய அவதார விசேஷத்தின் வைலக்ஷண்யத்தை பலவிடங்களில் பலபடிகளால் வெளியிட்டருளினமையைச் சற்று ஆராய்ந்து பார்க்கில் அவர் ஸாக்ஷாத் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் அவதாரமே என்பது திண்ணம்.

அவ்வைலக்ஷண்யங்களில் சிலவற்றை இங்கு அநுபவிப்போம்.

சக்ரவர்த்தித் திருமகனும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரும் தசரத சக்ரவர்த்தி நடத்திய புத்ரகாமேஷ்டி யாகத்தில் தானே அக்னியில் ப்ரஜாபதியாகத் தோன்றி, திவ்ய பாயஸத்தைத் தந்தருளி, அதை ஒரு வ்யாஜமாகக் கொண்டு ஸ்ரீராமனாக அவதரித்தான் பரமபதநாதன். அவ்வவதாரத்தில் **அத்திரவரக்கன் முடி பத்தும் ஒரு கொத்தென உதிர்த்த திறலோன்** என்று கொண்டாடும்படியாக ராவணாதிகளான அரக்கர் கூட்டத்தைக் கொன்று குவித்து தர்மத்தை ஸ்தாபித் தான். அதேபோல நம் ஆசார்யஸார்வபௌமனின் அவதாரத்திலும் தானே தோதாரம்பையின் ஸ்வப்னத்தில் ஒரு சிறு குழந்தையாகத் தோன்றி, ஸ்வர்ண கண்டயைக் கொடுத்து விழுங்கச் செய்து அதனை ஒரு வ்யாஜமாக்கி வேங்கடேச குருவாக அவதரித்து, வேதாந்தத்திற்குப் புறம்பான கருத்துக்களை போதித்து வந்த அஸார-அல்பஸாராதி மதங்களின் புரட்டு வாதங்களை வென்றொழித்து வேதாந்த ஜ்ஞானம் ஒளி வீசும்படி செய்தார்.



ஸ்ரீராமனாக அவதரித்த போது, தான் மனிதனல்லன் என்பதை ஸூசிபிக்க 12 மாதங்கள் கௌஸல்யையின் திருவயிற்றில் எம்பெருமான் வாஸம் செய்ததுபோல ஸ்ரீ தேசிக அவதாரத்திலும் **த்வாதசாப்தாந்த கர்பக:** என்றபடி தோதாரம்பையின் திருவயிற்றில் முழுமையாக 12 மாதங்கள் கர்பவாஸம் செய்தது இங்கே அநுபவிக்கத்தக்கது.

மேலும் பரதாழ்வான் போலே சேஷி உகந்த கைங்கர்யமே உத்தேச்யம் என்றும் சத்ருக்னாழ்வான் போலே பாகவத கைங்கர்யமே எல்லைநிலம் என்றும் அநுஸந்தித்துப் போந்து,

*வேதமறிந்த பகவர் வியக்க விளங்கிய சீர்*
*நாதன் வகுத்த வகை பெறுநாம் அவன் நல் அடியார்க்கு*
*ஆதரம் மிக்க அடிமை இசைந்து அழியா மறைநூல்*
*நீதி நிறுத்த நிலை குலையா வகை நின்றனமே.*

(அதிகார ஸங்கிரஹம் - 23)

என்று புருஷார்த்தகாஷ்டாதிகாரத்தில் (ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் - 16) அதனை ப்ரமாணங்களுடன் ஸ்தாபிக்கவும் செய்தவர் நம் ஸ்வாமி.

**யதிஸார்வபௌமனும் கவிஸார்வபௌமனும்**

*சமிதோதய சங்கராதி கர்வ:*
*ஸ்வபலாதுத்த்ருத யாதவப்ரகாச: |*
*அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந்*
*நநு ராமாவரஜ: ஸ ஏஷ பூய: ||*

(ஸ்ரீ யதிராஜஸப்ததி - 13)

என்ற ச்லோகத்தில் எம்பெருமானுக்கும் எம்பெருமானாருக்கும் உள்ள ச்லேடையை ஸ்தாபித்தருளி கண்ணனே ஸ்ரீபாஷ்யகாரராக திருவவதரித்தான் என்கிறார் நம் தூப்புல் குலமணி.

ஸ்வாமி தேசிகனைப் போன்று ஆழ்வார்களிடத்திலும், பூர்வாசார்யர்கள் மற்றும் ஸ்ரீ பாஷ்யகாரரிடத்திலும் அளவற்ற பக்தியும், ஈடுபாடும் கொண்ட வேறொருவர் இல்லை. உடையவரைப் போலவே பிற மதவாதிகளைக் கண்டித்தும், வாதப் போர்களில் வென்றும் வேதத்திற்கு பொய்யான அர்த்தங்களை போதித்து வந்த ப்ரதிவாதிகளை நிரஸித்தருளினவர் ஸ்வாமி தேசிகன்.

**''நம் ராமாநுஜ தர்சனத்தை வளர்த்து வரக் கடவீர்''** என்று பேரருளாளன் ஸ்வாமியின் அப்தபூர்த்தியன்று நியமிக்க, நம் ஸ்வாமியும் அத்திகிரி அருள்முகிலை **''அன்றே அடைக்கலம் கொண்டு'',** பின்னாளில் பகவத் ராமாநுஜரின் கீதா பாஷ்யத்திற்கு உரையாக **தாத்பர்ய சந்த்ரிகை,** ஸ்வாமி ஆளவந்தாரின் கீதார்த்த ஸங்கிரஹத்தை அடியொற்றி **கீதார்த்த ஸங்கிரஹ ரக்ஷை,** சாரீரக சாஸ்த்ரமான ந்யாயத்திற்கு **ஸ்ரீந்யாய பரிசுத்தி, ஸ்ரீ ந்யாயஸித்தாஞ்சனம், ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷை, ஸ்ரீ நிக்ஷேபரக்ஷை, ஸ்ரீமீமாம்ஸா பாதுகா, அதிகரண ஸாராவளி, சத தூஷணீ** என்ற பல க்ரந்தங்கள் மூலமாகவும், ஸ்தோத்ரம் மற்றும் ப்ரபந்தங்கள் மூலமாகவும் ஸ்ரீபாஷ்யகாரருக்குப் பிந்தைய காலங்களில் நம் ஸம்ப்ரதாயத்தை எள்ளளவும் எவரும் அசைக்க இயலாதவாறு ஸ்தாபித்தவர்களுள் முதன்மையானவர் ஸ்வாமி தேசிகன். அதனாலேயே ஸ்வாமி நயினாராசார்யர் **யதீந்த்ராம் சோSதவேத்யேவம்** என்று ஸ்வாமி தேசிகனை திருவேங்கடமுடையானின் அவதாரம் மற்றும் அவன் திருமணியின் அவதாரமாக மட்டுமல்லாமல் ஸ்வாமி ராமாநுஜரின் திரு அவதாரமாகவும் மங்களாசாஸனம் செய்கிறார். ஆக, ஸ்வாமி தேசிகன் ஸ்ரீபாஷ்யகாரருக்குக் காட்டும் உவமானம் அவருக்குமே பொருந்தும் என்பது திண்ணம்.

*ஆரணநூல் வழிச் செவ்வை அழித்திடும் ஐதுகர்க்கு ஓர்*
*வாரணமாய் அவர் வாதக் கதலிகள் மாய்த்த பிரான்*

என்று ஸ்வாமி தேசிகன் எம்பெருமானார் விஷயமாகக் காட்டும் உவமானத்தை முன்னிட்டுக்கொண்டு ஸ்வாமியின் திருக்குமாரர் **வாதியர் மூலமறக் கைத்தவன்** என்றும் **வாதியர் வாழ்வறுத்தாய்** என்றும் நம் தூப்புல் வள்ளலைக் கொண்டாடுவது இங்கு நன்கு சுவைக்கத் தக்கது.

**ஆழ்வார்களும் ஆரண தேசிகனும்**

ச்ரிய:பதியின் ஸங்கல்பத்தால் அவனால் மயர்வற மதிநலம் அருள்பெற்று அவனுடைய ஸ்வரூப-ரூப-குண விசேஷணங்களை அர்ச்சாவதாரங்களின் மூலமாக நன்கு அனுபவித்து தொண்டர்க்கமுதுண்ணச் சொல் மாலைகளாகத் தொடுத்து, அநாதியான தமிழ் மொழியில் பாசுரமிட்டுத் தெளியாத மறை நிலங்களைத் தெளியவைக்கும் ஓர் அத்யத்புதமான திருவிளக்கை ஏற்றினர் நம் ஆழ்வார்கள்.

ப்ரஹ்மாவிற்கு வேதத்தை உபதேசித்தருளின ஸ்ரீ ஹயக்ரீவனின் திவ்ய கடாக்ஷத்தாலே ஸர்வஜ்ஞத்வம் பெற்ற நம் ஆசார்ய வள்ளல், எளிதில் அறிந்து கொள்ள முடியாத வேதாந்த அர்த்தங்களை பாமரர்களும் ஸுலபமாக அறிந்துகொள்ளும்படி தத்வ-ஹித-புருஷார்த்தங்களை நன்கு விளக்கும் ரஹஸ்யங்களை மணிப்ரவாளம் மற்றும் தமிழில் அருளி, வேதாந்தமென்னும் தீபத்திற்கு மேன்மேலும் நெய்யைச் சேர்த்ததால் இன்றுவரை அவ்விளக்கானது கொழுந்துவிட்டு எரிந்துகொண்டு நம்மிடத்திலுள்ள அஜ்ஞானமென்னும் இருளைப் போக்கிக் கொண்டிருக்கிறது. **வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகால் அடியோம் உள்ளத்தெழுதியதோலையில் இட்டனம்** என்று ஸ்ரீஹயக்ரீவன் தமக்கு உபதேசம் செய்த விஷயங்களை அனைவரும் அறிந்து உஜ்ஜீவிக்க ஓலையில் இட்டோம் என்று ஸ்வாமி தாமே வெளியிட்டருள்வது மிகவும் ரஸிக்கத்தக்கது.

ஆழ்வார்களுள் ப்ரதானமானவரும் ப்ரபந்நஜந ஸந்தான கூடஸ்தருமான ஸ்வாமி நம்மாழ்வார் தம் அருளிச்செயல்கள் மூலம் அர்ச்சாரூபனான எம்பெருமானின் திருமேனியழகு அநுபவம் என்னும் (இந்திரியங்களுக்கான) விருந்துடன் அவன் திருவடியில் சரணாகதி என்னும் ஒப்பற்ற ஒரு (ஆத்ம விகாஸத்திற்கான) மருந்தையும் கலந்து கொடுத்து நம்மை உஜ்ஜீவிக்கச் செய்தார். அதேபோல அவரிட்ட வழியில் சென்று, ஆழ்வார் அறிவித்த சரணாகதி மார்க்கமே எல்லாருக்கும் உகந்தது என்று தம் ஸ்ரீஸூக்திகள் மூலம் உபதேசித்தருளி



சேதனர்களை வழிப்படுத்தி வானேற்றுவதையே தன் திருவவதார வைபவத்தின் தலையாய கர்த்தவ்யமாகக் கொண்டவர் நம் தூப்புல் மாமணி.

திருவரங்கனின் திவ்ய மங்கள திருமேனியைத் தமிழ் மாலைகளால் அலங்கரித்த பாண்பெருமாள் போல அவன் திருவடிகளில் பல காலங்கள் எழுந்தருளி, அரங்கனை பாதாதி கேசமாய் ஸ்தோத்ரம் செய்து அநுபவித்தவர் நம் ஸ்வாமி. மேலும் பெரிய பெருமாளின் பாதுகை விஷயமாக **பாதுகாஸஹஸ்ரம்** என்னும் மஹாகாவ்யத்தை அருளிச் செய்து **வேதாந்தாசார்யர்** என்றும் **ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்** என்றும் திவ்ய தம்பதிகளால் கொண்டாடப்பெற்றவர்.

குலசேகரப்பெருமாள் போல சக்ரவர்த்தித் திருமகனிடத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட நம் ஆசார்ய சிரோன்மணி ஸ்ரீமத் ராமாயணத்தை கத்யமாகவும் (ஸ்ரீ ரகுவீர கத்யம்), காவ்யமாகவும் (ஹம்ஸ ஸந்தேசம்), சரணாகதி சாஸ்த்ரமாகவும் (அபயப்ரதான ஸாரம்) அருளினார். அவரே ஸர்வகாலங்களிலும் கண்ணனையே நினைத்து, உருகி, கரைந்து பருகப் பருகத் தெவிட்டாதப் பாசுரங்களினால் அவனை ஆராதித்து, அவனுக்குப் பல்லாண்டு பாடியருளின பட்டர்பிரானின் க்ருஷ்ணானுபவத்தின் நீட்சியாக **யாதவாப்யுதயம்** என்னும் காவ்யத்தைக் கொடுத்தார்.

ஸ்வாமி தேசிகன் கலியனைப் போலே அர்ச்சாவதாரத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர். தன் அவதாரவைபவத்தில் தென்னாடு, வடநாடு, திருவேங்கடம், அஹோபிலம், வ்ருந்தாவனம், திருஅயோத்தி, சாளக்ராமம், வதரியாச்ரமம் என்ற பல திவ்ய க்ஷேத்ரங்களுக்கு எழுந்தருளி, ஆங்காங்கே கோயில் கொண்டிருந்த அர்ச்சாரூபியான எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்தும் ஸித்தாந்த ப்ரவசனங்கள் செய்தும் ஸ்ரீபாஷ்யகாரர் காட்டிய ஸத்ஸம்ப்ரதாயத்தை பாரத தேசம் முழுவதும் ஸ்தாபித்தார். **கலியன் உரை குடிகொண்ட கருத்துடையோன்** என்ற திருநாமம் வேறு யாருக்குச் சாலப் பொருந்தும்!

இப்படி தன் அவதார வைபவத்தின் வைலக்ஷண்யங்களைப் பல படிகளில் வெளியிட்டருளி, சேதனர்களை விபவத்தில் தன் உபதேசங்களாலும் திருக்கல்யாண குணங்களாலும் அடிமை கொண்டு, பின் அர்ச்சையில் தன் காந்தியாலும் ஸ்ரீஸூக்திகளாலும் வசீகரித்து, வழிப்படுத்தி வானேற்றுபவர் ஸ்வாமி தேசிகன்.

*ஸாக்ஷாத் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தனும் |*
*மக்னான் உத்தரதே லோகான் காருண்யாத் சாஸ்த்ர பாணினா ||*

''பரமபுருஷனான ஸ்ரீமந்நாராயணன் கருணைக்கடல். ஸம்ஸார பந்தத்தில் கட்டுண்டு ஜீவன்கள் படும் அவஸ்தையை பொறுக்கவொண்ணாது ஆசார்யனாக தானே மனுஷ்ய சரீரத்தை எடுத்துக் கொண்டு, சாஸ்த்ரம் என்னும் கைக்கொண்டு நம்மைக் கரையேற்றுகிறான்'' என்று ச்ருதி-ஸ்ம்ருதி வாக்யங்கள் உத்கோஷிக்கின்றன.

*அன்றிவ்வுலகினை ஆக்கி அரும் பொருள் நூல் விரித்து*
*நின்று தன் நீள் புகழ் வேங்கட மாமலை மேவி பின்னும்*
*வென்றிப் புகழ் திருவேங்கடநாதன் எனும் குருவாய்*
*நின்று நிகழ்ந்து மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே ॥*

(பிள்ளையந்தாதி - 5)

என்று ஸ்வாமி தேசிகன் ஸாக்ஷாத் திருவேங்கடமுடையானின் அவதாரமே என்றும் இத்தேசிக அவதாரத்தின் மூலமாக எம்பெருமான் நமக்குப் பண்ணும் பேருபகாரத்தைத்யும் சொல்லித் தலைக்கட்டுகிறார் ஸ்வாமி நயினாராசார்யர்.

**தூதனுமாம் நாதனுமாம் என்னைப் பற்றி சோகம் தீர்** என்று கீதாசார்யன் தானே வெளியிட்டருளினான். பாண்டவ **தூதன்** காட்டிய படி நாதனான வேங்கட **நாதனைப்** பற்றி இப்பிறவித் துயரிலிருந்து நாம் விடுபட ப்ரார்த்திப்போம்!



ராமாநுஜ தயாபாத்ரம் தனியன்
திரு அவதார உத்ஸவம்



ஸ்ரீஜயந்தீ உத்ஸவம்



உறியடி உத்ஸவம்







ஸ்ரீ ஹயக்ரீவ ஜயந்தீ





யஜுர் உபாகர்ம அத்யயன ஹோமம்



ஶ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# திருப்பவித்ரோத்ஸவப் பத்திரிகை

**பசலி 1433 – சோபக்ருத் வருஷம் – 2023**

**29.09. 2023 முதல் 05.10.2023 வரை**

---

ஶ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், அர்ச்சாரூபியாய், அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பனாய் ஆச்ரிதோஜ்ஜீவனார்த்தம் ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனும், முதலாழ்வார்கள் மூவரில் ஒருவராகிய, ஸ்ரீபேயாழ்வார் அவதாரஸ்தலமுமாயும், தூப்புல் நிகமாந்த மஹாதேசிகனைக் கொண்டு அனுபவித்து வரும் ஸ்தலமுமாகிய திருமயிலையில் எழுந்தருளியிருப்பவனுமான ஸ்ரீதிருவேங்கடமுடையான் நாளது சோபக்ருத் வருஷம் புரட்டாசி மாதம் 12ம் தேதி (29.09.2023) வெள்ளிக்கிழமை முதல் பவித்ரோத்ஸம் ஆரம்பித்து நடத்திக் கொள்வதாக ஸங்கல்பித்துக் கொண்டிருக்கிறான்.

மேற்படி உத்ஸவத்தில் வேதபாராயணம், அத்யாபகம், க்ரந்த பாராயணம் ஆகிய கைங்கர்யங்களில் ஸ்வாமிகள் அன்வயித்து, மாமயிலை திவ்யதம்பதிகள், ஸ்ரீபேயாழ்வார் மற்றும் ஸ்வாமி தேசிகனின் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாக வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

அங்குரார்ப்பணம் – 27.09.2023 – புதன்கிழமை மாலை

அதிவாஸம் – 28.09.2023 – வியாழக்கிழமை மாலை

தினசரி ஹோமம் – காலை 8:30 மணி மற்றும் இரவு 8:15 மணி

மஹாபூர்ணாஹூதி – 05.10.2023 – வியாழக்கிழமை

பிரதி தினம் மாலை 6.15 மணிக்கு பெருமாள், தேசிகன் திருவீதி புறப்பாடு

**R. ராகவன், R. அனந்த பத்மநாபன், R. முகுந்தன்**
*தர்மகர்த்தாக்கள்*

| நாள் | காலை உத்ஸவ உபயம் | காலை ததீயாராதனை உபயம் | மாலை உத்ஸவ உபயம் | மாலை ததீயாராதனை உபயம் |
|---|---|---|---|---|
| 27.09.2023 (புதன்) | அங்குரார்ப்பணம் (மாலை)<br>ஸ்ரீ சேனைநாதன் புறப்பாடு | —— | ஸ்ரீ K.L.ராமதுரை | —— |
| 28.09.2023 (வியாழன்) | அதிவாஸம் (மாலை) | —— | ஸ்ரீ அத்திகிரி அருளாளன் | —— |
| 29.09.2023 (வெள்ளி) | ஸ்ரீ. R. முகுந்தன் | 1. ஒலக்கூர் ஸ்ரீ R. ஸ்ரீநிவாஸன்<br>2. ஸ்ரீ S. ரவிச்சந்திரன் | ஸ்ரீ N.S. பார்த்தஸாரதி | 1. ஸ்ரீ K. ராஜகோபாலன்<br>2. ஸ்ரீ N.சேஷாத்ரி |
| 30.09.2023 (சனி ) | 1. ஸ்ரீமதி ஜானகியம்மாள் பண்டு<br>2. ஸ்ரீ S.பத்மநாபன் | ஸ்ரீ K.R. ராமஸ்வாமி<br>ஸ்ரீ R. பார்த்தஸாரதி | 1. ஸ்ரீ P.V. ராகவன் (பண்டு)<br>2. ஸ்ரீ மதுராந்தகம் ஸ்ரீனிவாசன் | 1. ஸ்ரீ N.S. வரதாச்சாரி<br>2. ஸ்ரீ. நந்தகுமார் |
| 01.10.2023 (ஞாயிறு) | ஸ்ரீமதி பத்மா ராமானுஜம் | ஸ்ரீ S.V.S. ராகவன்<br>ஸ்ரீ. R. ராமக்ருஷ்ணன் | ஸ்ரீ A.N.S. சுந்தரம் | 1. ஸ்ரீ A.N.S. சுந்தரம்<br>2. ஸ்ரீ L.V. நரஸிம்மன் |
| 02.10.2023 (திங்கள்) | ஸ்ரீ T.V. நரஸிம்மன் | 1. ஸ்ரீ D. சுந்தரராஜன்,<br>2. ஸ்ரீமதி D.சுஜாதா | ஸ்ரீ Dr. E. ஸ்ரீனிவாசன் | 1. ஸ்ரீ T.M. ரவி நரஸிம்மன்<br>2. ஸ்ரீ M.P. ராஜா |
| 03.10.2023 (செவ்வாய்) | ஸ்ரீ S. அருண் | ஸ்ரீ M.D. சுதர்ஸனம் ஐயங்கார் (பண்டு)<br>ஸ்ரீமதி ப்ரேமா பார்த்தஸாரதி | ஸ்ரீ N.K. ரங்கஸ்வாமி ஐயங்கார் குடும்பம் | 1. ஸ்ரீ R. சம்பத்,<br>2. ஒலக்கூர் ஸ்ரீ R. ராஜகோபாலன் |
| 04.10.2023 (புதன்) | ஸ்ரீ S. சத்யநாராயணன் &<br>ஸ்ரீ N.கேசவன் | ஸ்ரீ V.J. பார்த்தஸாரதி<br>ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா<br>ஸ்ரீமதி T.V. சாந்தா | 1. ஸ்ரீமதி கமலா & சுமைதாங்கி கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் குடும்பத்தினர்<br>2. ஸ்ரீமதி R. மஹாலட்சுமி | ஸ்ரீ T.M. ராஜகோபாலன்<br>ஸ்ரீ. R. முகுந்தன் |
| 05.10.2023 (வியாழன்) | 1. Official Trustee of Tamilnadu CKD Mudaliar & Seshacharulu Trust<br>2. கீழச்சேரி ஸ்ரீ S. ராகவன் | ஸ்ரீ P.R. கோபாலக்ருஷ்ணன் & P.G. அமிர்தவல்லி குடும்பத்தினர் | 1. Official Trustee of Tamilnadu CKD Mudaliar & Seshacharulu Trust<br>2. ஸ்ரீ. வஸந்த் ஷான்பாக் பூர்ணாஹூதி திருமஞ்ஜனம் ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி | ஸ்ரீ சந்திர குமார் & லீலா குமாரி குடும்பத்தினர் |

பட்டு பவித்ரங்கள் உபயம் : Dr. திலீப் க்ருஷ்ணா; ப்ரதி தினம் காலை, மாலை க்ஷீர கைங்கர்யம் உபயம் : ஸ்ரீமதி ஹேமலதா ரமாமணி

CONTRIBUTIONS IN KIND / CASH ARE WELCOME



புஷ்போத்ஸவம்





புஷ்போத்ஸவம்









ஶ்ரீ:









## புஷ்போத்ஸவம்





ஸ்ரீ:

கண்ணுக்கினியன






## புஷ்போத்ஸவம்








## புஷ்போத்ஸவம்









ஸ்ரீ:

# பிள்ளைத்தமிழுக்கு வித்திட்ட பெரியாழ்வார் (14)

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் S. பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு

சென்ற திருமொழிகளில் கண்ணன் தன் தலையை அங்குமிங்கும் திருப்பாமல் ஓரிடமே பார்ப்பதற்காக ஒரு காக்கையை யசோதை கூப்பிடுவதாகவும், அக்காக்காயைக் கோல் கொண்டுவரச் சொல்லி அழைப்பதாகவும் பாசுரங்களை அமைத்திருந்ததை அனுபவித்தோம். இனி ஆழ்வார், கண்ணனை மஞ்சனமாட்டிக் குழல் வாரியபின் செய்ய வேண்டிய பூச்சூட்டலுக்கு யசோதை அழைத்தவாற்றை அனுபவித்துப் பாசுரமிடுகிறார் **ஆனிரை மேய்க்க** என்ற இந்த தசகத்தில்.

முதல் பாசுரத்தில், கண்ணனுக்குத் தலைவாரி பூச்சூட்டும் முன் பக்கத்தில் இருக்கும் ஆய்ச்சிமார்கள் கண்ணன் தங்கள் வீட்டிலிருந்த பாலையெல்லாம் உண்டு, காரணம் கேட்டால் காடு மேடெல்லாம் திரிந்து ஆநிரை மேய்க்க உடலில் வலு வேண்டாமா? அதற்காக எடுத்துண்டேன் என்ற பதிலுரைப்பதாகச் சொல்ல, கண்ணன் உண்மையிலேயே மாடு மேய்க்கச் சென்றுவிடுவானோ என்றஞ்சிக் குழந்தையைப் பூச்சூட்ட அழைக்கிறாளாம். தேனைக் காட்டிலும் மதுரமானவனே! உபகாரகனே! உன்னிடம் பற்று இல்லாதவர்கள் எல்லாம் பரிஹாசம் பண்ணிப் பேசும்படிக் காலையிலேயே பானையில் கறந்து வைத்த பாலையெல்லாம் உண்டுவிட்டு, ஏற்கனவே கரிய நிறமான உன் திருமேனி மேலும் வாடும்படிக் காடுகள் முழுவதும் திரிந்துப் பசுக்கூட்டத்தை மேய்க்கப் போகிறாயே! நீ அருமருந்து என்பதை அறியவில்லையா? ஆகவே அங்கெல்லாம் போகாமல் செண்பகப் பூச்சூட்ட வருவாயாக என்று யசோதை அழைப்பதாக ஆழ்வார் அமைக்கிறார். மருந்துகளில் தேனொன்றே இனியதாயும் நோய்களைக் குணப்படுத்துவதாயும் இருக்கும். அதற்கும் மேம்பட்டவனான நீ என் கண்ணிலிருந்து மறைந்திருந்தால் எனக்குப் பயமும், மனநோய்களும், உடல் நோய்களும் உண்டாகின்றன. உன்னைக் கண்டமாத்திரத்தில் நோய்கள் பறந்தோடுகின்றன. ஆக நீ அருமருந்து. உன்னைப் பெருமையறிந்த பல அறிஞர்கள் சமதமாதிகளான பல புஷ்பங்களால் அர்ச்சிக்கின்றனர். ஆக நீ அடியேனின் பூவையும் சூடிக்கொள்ள வாராய் என்றழைப்பது உயர்ந்த அனுபவம்.

எம்பெருமானின் நீலமேகச்யாமள உருவத்தை அடுத்த பாசுரத்தில் வர்ணிக்கிறார். பார்ப்பவர் கண்கள், கர்பத்தையுடைய மேகங்களை நேரில் கண்டாற்போல் இருக்கும்படியான திருமேனியை உடையவனே! ஏழுலகும் ஜன்ம ஸாபல்யம் பெறும்படி இந்த ஆயர்குலத்தில் உதித்தவனே! உலகத்துச் செல்வத்திற்கெல்லாம் நாயகியான பெரிய பிராட்டிக்கும் நாயகனே! திருவரங்கத்தில் சயனித்திருப்பவனே! நின்று வாசனை வீசுகின்ற மல்லிகைப் பூவைச் சூட்டிக்கொள்ள வாராய்! என்று யசோதை அழைக்கிறாள். உன்னைக் கண்டால் போதும், எல்லாத் தாபங்களும் தீர்ந்து குளிர்ந்துக் களித்திருக்கும் கண்கள்!. அப்படிப்பட்ட நீண்ட பெரிய அழகிய திருக்கண்களாயிற்றே! மேலும் ப்ரளயகாலத்திலே உலகேழையும் உண்டு, மறுபடி அவைகளைச் சிருஷ்டித்தவுடன் வந்து பிறப்பவனே! ஜகத் ஸம்ஹார ஸ்ருஷ்டி ஸ்திதி அந்த: ப்ரவேசாதிலீலனே! என்கிறார். திருவுடையாள் மணவாளா! என்று க: ஸ்ரீ: ச்ரிய: என்று திவ்யதம்பதிகளுக்குப் பரஸ்பரம் உள்ள ஏற்றத்தையும் ஒற்றுமையையும் எடுத்துரைத்தார். திருவரங்கத்தே கிடந்தாய் என்று சொன்னதாலே அர்ச்சாவதார மூர்த்தியாய் இருந்தால் ஓரிடத்தில் இருப்பாய்! உன்னை ஸதாஸர்வகாலமும் கண்டுகளிக்கலாம். இது விபவாவதாரமாயிற்றே! நீ செல்லும் ஒவ்வொரு முறையும் வாராய் என்றழைக்க வேண்டியுள்ளதே என்ற அர்த்தமும் த்வனிக்க பதமருளியுள்ளார். இரவில் பூத்த மல்லிகை என்று பார்க்காதே! இதன் நறுமணம் நீங்காமல் சேமித்து வைத்திருக்கிறேன் என்ற பொருள்தேறும்படி மருவிமணங்கமழ்கின்ற மல்லிகை என்றது ரஸம்!

மூன்றாம் பாசுரத்தில் திருவின் அவதாரங்களான கோப கன்னிகையர்களுடன் அவதார காலத்தில் எம்பெருமான் களித்ததைப் பாடுகிறார். வீட்டில் உயரத்திலுள்ள மச்சிலும் அதற்கு மேலுள்ள இடத்திலும் ஏறி, கன்னிப்பெண்கள் இருக்கும் இடத்தில் புகுந்து, அவர்களுடைய பட்டாடைகளையும், கச்சுகளையும் கிழித்துப் பிளந்து தினமும் தீம்பு செய்து விளையாடும் கண்ணனே! நீண்ட திருவேங்கடமலையில் நிற்கும் எங்கள் ஸ்வாமியானவனே! புத்தம்புதிதாய் பசுமையான தவளத்தோடு கூடிய பாதிரிப்பூ சூட்டிக்கொள்ள வாராய் என்று யசோதை அழைப்பதாகப் பாசுரமிடுகிறார். இந்தப்பாசுரத்தில் திருவேங்கடத்தானே என்று அழைத்ததற்கு, கோகுலத்திலும் ப்ருந்தாவனத்திலும் இவ்வளவு இடங்கள் இருந்தும் அது போதாதென்று திருமலையில் நின்றான் என்றும், இவ்வளவு தீம்புகள் செய்தபின் கண்ணன் சென்று ஒளிந்துகொள்ளுமிடம் திருவேங்கடம் என்றும் அனுபவிப்பார்கள் நம் ஆசார்யர்கள். அதுபோல் எந்தாய்! என்று அழைத்து,

மற்றவர்களோடு உன் உறவு எப்படியோ அடியேனுக்குத் தாயும் தந்தையுமாய் ஸ்வாமியாய் நிற்பவன் நீ என்று ஆழ்வார் யசோதை வாயிலாகச் சொல்வதும் அழகு!

நான்காம் பாசுரத்தில் தெருப்பெண்களிடத்தில் கண்ணன் செய்யும் லீலையைச் சொல்கிறார். புருவம், கரிய குந்தலங்கள் ஆடும்நெற்றி இவற்றாலே ப்ரகாசிப்பவனே! குட்டி மேகங்கள் போன்ற திருமேனி அழகுடையவனே! குணபூர்த்தி உள்ளவனே! நீ தெருவில் நின்றுகொண்டு சிறிய இடைப்பெண்களைத் தீம்பு செய்ய வேண்டாம்! மருக்கொழுந்தையும் தவனத்தையும் இருபக்கத்திலும் சீராகக் கட்டிய பூமாலையின் மணம் எங்கும் வீசுகின்றன. நீ உள்ளம் மகிழ்ந்து இவற்றைச் சூட்டிக் கொள்ள வாராய்! என்று யசோதை கண்ணனை அழைக்கிறாள். இதில் ஆழ்வார் மணம் கமழ்கின்ற என்றவிடத்தில் கமழ்கின்ற என்று எச்சமாகத் தோன்றும் பதத்தை வினை முற்றாகக் கொண்டு மணம் வீசுகின்றன என்று பொருளைத் தருவது தமிழ் மொழியின் சிறப்பை வெளிப்படுத்துகிறது! ஆழ்வார் களின்தமிழ்இதற்காகவே கொண்டாடப்படவேண்டும்!

ஐந்தாம் பாசுரத்தில் எம்பெருமான் கண்ணனாய்ச் செய்த லீலைகளோடு ராமாவதார லீலைகளையும் அடுக்குகிறார். பகாசுரன் என்ற அரக்கனை வாயைப் பிளந்து விட்டெறிந்தவனே! யுத்தம் செய்த குவலயாபீடம் என்ற யானையினுடைய தந்தத்தைப் பறித்தவனே! மாயங்கள் பொருந்திய ராக்ஷஸியான சூர்ப்பணகையின் மூக்கையும் அவளுக்குக் காவலாக இருந்த கடல்போல் எழுந்த படையினைக் கொன்று வெற்றி கொண்டவனே! இப்படி பரமனான நீ அஞ்சி, வெண்ணெயை வாரி விழுங்கிய பொழுது, அஞ்சாமல் முன்பு உன்னை அடித்தேன்! இனி அவ்வாறு அடிக்கமாட்டேன்! ஆதலால் தெளிவான நீரிலே செழித்துக் கிளம்பின செங்கழுநீர்ப் புஷ்பங்களைச் சூட்டிக்கொள்ள வாராய் என்று கண்ணனை யசோதை அழைக்கிறாள். ஆழ்வார் சூர்ப்பணகையைக் குறிக்கையில் கள்ள அரக்கி என்கிறார். நம் பூர்வாசார்யர்கள் சூர்ப்பணகையின் கள்ளத்தைப் பலவாறாக விரிப்பார்கள். 1. கள்ளம் அவளது கூடப்பிறந்த ராக்ஷஸ குணம். 2. தன்னிடம் அழகு உள்ளது; சீதை குரூபிணி என்று சொல்லி இராமனின் சித்தத்தை அபகரிக்கப் பார்த்துப் பின் சீதையையே அபகரிக்கப் பார்த்தது. 3. தன்னைப் பற்றிச் சொல்லும் பொழுது தான் ஒரு விதவை என்பதைச் சொல்லாமல் மறைத்தது 4. ராமனை வசீகரிக்க அழகான வேடம் கொண்டதும் கள்ளமே 5. இவளே தான் கள்ள வேடம் கொண்டதை சுயரூபம் காட்டித் தன் அடைமொழிக்கு வழி காட்டினாள் அன்றோ! அடுத்து காவலனைத் தலைகொண்டாய் என்பதற்கு இராவணனைத் தலையறுத்ததையும் கொள்ளலாம். ஆழ்வார் இப்பாசுரத்தில் அடியேன் என்ற பதத்தை இரண்டு பொருள்தரும்படி பயன்படுத்தியிருப்பது இன்னுமொரு அழகு! **அள்ளி நீ வெண்ணை விழுங்க அஞ்சாது அடியேன் அடித்தேன்** என்றவிடத்தில், உன்னுடைய ப்ரபாவம் தெரியாத நாளில் அடித்தேன்; இப்போது எல்லாம் தெளிந்த யசோதை ஆதலால் அடிக்கமாட்டேன் என்று பொருளில் ஆழ்வார் அருளுகிறார். யசோதைக்கு இருக்கும் ஆதரத்தாலே அடியேன் என்று சொல்லிப் பின் தொடங்கின வாக்கியத்தை அடித்தேன் என்று முடிக்கிறாள். அல்லது அடிமைசெய்ய வேண்டியவளான நான் அறியாமையில் அடித்தேன் இப்போது அடிமையை அறிந்துகொண்டு அடியேன் என்றதாலே அப்பிழையைப் பொறுத்துக்கொள்வாய் என்ற பொருள் கிடைக்குமாறு அமைத்திருப்பது அழகோ அழகு!

ஆறாம் பாசுரத்தில் யசோதை கண்ணனை நம்பி! என்றழைக்கிறாள். குணபூர்த்தியுடையவனே! என்று கண்ணனை அழைத்து அவள் அடுக்கும் சரித்திரங்களைப் பார்ப்போம்! ரிஷபங்களோடு தன்னைப் பொருந்த வைத்து அதே ஸமயம் எதிலும் ஆசையற்றவனாய் நிற்பவனே! செய்ய நினைத்த தீமைகளைச் செய்து உன் கால்களால் துள்ளியெழும்பித் தள்ளி மேல்விழுந்து கம்ஸனை அழித்தவனே! தெருக்களிலே தீமை செய்பவன் போலிருந்து அக்கணமே பெரும் வீரர்களோடு போர் செய்து பெருமையோடு வருபவனே! அழகும் அருமையுமானவனே! புன்னைப் பூச்சூட்ட வாராய்! நப்பின்னை, ஆயர்பாலர்கள், ஆயர் சிறுமியர்கள் இவர்களைக் காத்து மற்று இவர்களிடமிருந்து ஏதும் எதிர்பார்க்காதவனாய் மற்றவற்றில் பற்றில்லாதவனாய் நின்றதைக் கூறி அவன் குணபூர்ணன் என்பதைக் காட்டியது நினைந்து நினைந்து ரஸிக்கத்தக்கது!

தலையிலும் தோள்களிலும் கைகளிலும் ஒரே ஸமயத்தில் பால், தயிர் குடங்களை எடுத்து வைத்துக் கொண்டு கைகளால் உயரே எறிந்து அவை பூமியில் விழாதபடி பிடித்து மீண்டும் எறிந்து அதைப் பிடித்து இவ்வாறு விரைந்து ஆடுவது குடக்கூத்தாடுவது எனப்படும். இவ்வாறு குடக்கூத்தாடுவதில் கண்ணன் ஸமர்த்தன். இவ்வாறு கண்ணன் ஆடும் பொழுது ஆயர்பாடி மக்கள் அனைவரும் அனுபவிப்பர். ஏழாம் பாசுரத்தில் யசோதை கண்ணனின் இந்த ஸாமர்த்யத்தைக் கொண்டாடி அழைக்கிறாள். பல பால், தயிர் குடங்களை எடுத்து அவைகளை ஏறவிட்டு கூத்தாடுவதில் ஸமர்த்தனான எங்கள் நாதனே! மடப்பத்தை உடைய மதிமுக மடந்தையரெல்லாரையும் மோஹிக்கச் செய்யும் ஸாமர்த்தியமுள்ள என் புதல்வா! முன்பு ஒரு அவதாரத்திலே நகங்களை ஊன்றிச் சொருகி ஹிரண்யாஸுரனுடைய மார்பை இரு பிளவாகக் கீண்டவனே! திருக்குடந்தையில் பள்ளி

கொண்டுள்ள எங்கள் மன்னனே! குருக்கத்திப் பூவைச் சூட்டிக்கொள்ள வாராய்! என்று அழைக்கிறாள். இப்பாசுரத்தில் எம்பெருமான் நிற்பது, வீற்றிருப்பது, பள்ளிகொண்டது என்ற மூன்று தசைகளையும் காட்டி அதனுடன் ஹாஸ்யம், அத்புதம், கருணை, வீரம், ச்ருங்காரம் என்று பல ரஸங்களையும் அனுபவிக்கும்படி பணித்திருப்பது ஆழ்ந்து ரஸிக்கத்தக்கது!

மாலிகன் என்றொருவன் கண்ணனோடு தோழமை கொண்டிருந்தான். அதனாலேயே அவனை அந்த பெருமை தோன்ற ஆழ்வார் சீமாலிகன் என்றழைக்கிறார். அவன் கண்ணனிடம் ஆயுதங்களைப் ப்ரயோகிப்பதெல்லாம் அறிந்தான். அதனால் கர்வமும் கொண்டான். ஸாதுக்களை விரோதித்தான். அவனை நண்பனாகையாலே நேரே அழிக்காமல் முடிக்க வழிதேடி, அவனிடம் நீ இன்னும் பயிலவேண்டியது பல உள்ளன என்று சொல்ல, அவனும் சக்ராயுதத்தைப் பிரயோகிக்கக் கற்றுத்தரச் சொன்னான். அதுவேண்டாம் உனக்கு வராது என்று சொல்ல மாலிகன் கண்ணனை நிர்பந்தித்தான். கண்ணன் சொல்லிக்கொடுக்கும் பொழுது அவன் சக்ரத்தை அவன் தலையோரமே செலுத்த அது செல்ல இடமின்றி அவனது தலையை அறுத்து அவனை முடித்தது. இந்த சரித்ரத்தை ஆழ்வார் கொண்டாடிப் பூச்சூட்டிக்கொள்ள கண்ணனை அழைக்கிறார். சீமாலிகனிடம் ஸ்னேஹம் கொள்ளவும், அந்த மாலிகனை சாகும்படி சக்ரத்தினாலே அவனது தலையை வாங்கவும் ஸமர்த்தனே! ஆமாறு அறியும் பிரானே! அழகிய ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்டிருப்பவனே! மோசம் போவதிலிருந்து என்னைக் காப்பாற்றியவனே! இருவாட்சிப் பூ சூட்டிக்கொள்ள வாராய் என்று யசோதை அழைப்பதாக அமைத்திருப்பது அழகு! ஆழ்வார் ஆமாறு அறியும் பிரான் என்று எம்பெருமானை அழைத்திருப்பது எத்தனை பொருத்தமானது! சக்தி, அசக்தி; யுக்தம், யுக்தமற்றது; இதம், இதமற்றது என இவையெல்லாம் ஆராய்ந்து தெளிந்து அறிபவன் கண்ணன். ஆமாறு என்பதை ஆ மாறு என்று பிரித்தால் ஆச்சர்யமான வழியில் மாறுபட்டு நிற்பவன் என்று பொருள்கொண்டு, மாலிகன் தன்னிடம் ஸ்னேஹமும் தனக்கு வேண்டியவரிடத்தில் பகையும் கொண்டிருப்பதை ஆராய்ந்தறிந்தவன் என்று பொருள் தரும். இப்படி என் மனோரதத்தைப் பூர்த்தி செய்ய விபவாவதாரம் மட்டுமல்ல அர்ச்சையாயும் அவதரித்தாய். குடந்தையில் கிடந்ததைப் போலவே அசையாது அரங்கத்திலும் கிடந்து மிகவும் ஸுலபன் ஆனாய்! இனி எனக்குப் பூச்சூட்ட ஏமாற்றம் ஏது என்ற அனுபவம் அழகு!

ஒன்பதாம் பாசுரத்தில், இந்த அண்டத்திலுள்ள பிரமன் தொடக்கமாக எல்லாத் தேவர்களும் சூழ்ந்திருக்கும்படி உன் (ஆஸ்தானத்திலே) திருவோலக்கத்திலே வீற்றிருப்பவனே! பக்தர்களுடைய மனதில் வஸிப்பனே! பரிசுத்தமான தாமரையில் உள்ள பிராட்டிக்கு நாதனே! ஏழு உலகங்களையும் உன் திருவயிற்றில் அடக்கிக்கொண்டு ஒற்றை ஆலிலையில் யோகநித்ரை செய்பவனே! நீராட்டி அலங்கரித்துவிடும் நான் உன்னைப் பூவணிந்து பார்க்க ஆசைப்படுகிறேன். நான் உகக்க கருமுகைப் பூச்சூட்ட வாராய் என்றழைக்கிறாள் யசோதை! அண்டத்தமர்கள் புடைசூழ விளங்கிய நீ அவ்வண்ணமே தொண்டர்கள் உடலில் இருக்கும் நெஞ்சத்தில் உறைந்தாய்! இப்படி உனக்கு ஆதாரமாகத் தோன்றிய அவர்களையும் அனைத்துலகையும் உண்டு உன் திருவயிற்றில் வைத்துக்கொண்டு ஆலிலையில் துயின்றாய்! ஒரு ஆலிலை ஆதாரமாகக் கூடுமோ? அது எவ்வளவு ஆதாரமோ அவ்வளவே மற்றெல்லாமும் என்று தன்னுடைய அந்தர்வ்யாப்தி, பஹிர்வ்யாப்தி ப்ரகாரம் இரண்டையும் காட்டியதை ஆழ்வார் பாசுரமிட்டார். மலரிலே பிறந்தவளின் மணாளனான உனக்கு இலையிலே துயிலுவது பொருத்தமே! என்று கூறி பூச்சூட அழைத்ததும் அழகு!

பத்தம் பாசுரத்தில் கீழே ஒன்பது பாசுரங்களால், செண்பகம், மல்லிகை, பாதிரி, தமனம், செங்கழுநீர், புன்னை, குருக்கத்தி, இருவாட்சி, கருமுகை என்று சொல்லிய புஷ்பங்களோடு நினைக்கப்படுவனவும், சொல்லப்படுவனவுமான எல்லாப் புஷ்பங்களையுமே இன்றைய தினம் கொண்டு வந்தேன். இவற்றை உனக்குச் சூட்டும் படி வா! என்று, மாவலியிடமிருந்து மண்ணை ஸ்வீகரித்தருளின எம்பெருமானைப் பற்றி இடைச்சியான யசோதை களித்துச் சொன்னபாடல்கள் இவை. இவற்றை கானமாகச் சொல்லும்படிப் பாசுரமாக்கியது ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகனான பட்டநாதன் (என்னும் பெரியாழ்வார்) என்று இந்த பூச்சூட்டலை பெரியாழ்வார் முடித்து வைக்கிறார். இதில் எண்பகர் என்பதற்கு ஆசைப்பட்ட, சொன்ன, ப்ரியமும் சாஸ்த்ர ஸம்மதமும் உள்ள, இன்னதின்ன என்று கணணம் செய்யப்பட்டு என்று பலவிதமாகப் பொருள் உரைப்பர். அதுபோல் மண்பகர் என்பதற்கும் மூவடி தா என்று வாமனமாய்க் கேட்ட மண், அல்லது மாவலி கொடுத்தேன் என்ற மண், அல்லது தேவதைகள் தன்னை இரந்த மண் என்று ரஸமாகப் பொருள் உரைப்பர். இந்தப் பாசுரங்களில் இறுதியில் பலச்ருதி பாசுரத்தில் பலன் சொல்லப்படவில்லை என்னில் இந்த இறுதிப் பாசுரத்திற்கு வக்தாவையும் விஷயத்தையும் சொல்வதிலே நோக்கு என்று கொள்க; அல்லது பலன் சொல்லாதவிடத்திலே அனைத்துப் பலனும் உள்ளதென்று அறிக!

வழக்கம்போல் எல்லாப் பாடல்களிலும் பரத்வத்தையும் ஸௌலப்யத்தையும் சேர்த்து ஆழ்வார் அனுபவித்ததை நாமும் அனுபவித்தோம்! அடுத்த இதழில் யசோதை கண்ணனுக்குக் காப்பிடுவதை ரஸிக்கலாம்.

– தொடரும்

# தயையின் பெருமையும், அதைப் போற்றும் தயா பாத்ரரும்

ஸ்ரீமதி வஸுமதி S. ராஜன், பெங்களூரு

*ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம்|*
*ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம்||*

ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த ஸ்தோத்ர நூல்களுள் பலராலும் பெரிதும் போற்றப்படுவது, திருவேங்கடவனின் உயர்ந்த குணமான தயையைப் போற்றுவதான **தயாசதகம்** ஆகும். அஸங்க்யேய கல்யாண குணகணனான எம்பெருமானிடம் உள்ள தயை என்னும் கருணையே, சேதனர்கள் உஜ்ஜீவிப்பதற்கு முக்யமான காரணமாகும். ஸ்ரீ தேசிகன், எம்பெருமானிடம் கொண்ட அதீத பக்தியின் காரணமாக இந்த தயை என்னும் குணத்தை, **தயாதேவி**யாக உருவகப்படுத்தி, தன் கண் முன்னே நிறுத்தி, அவளுடன் உரையாடுவது போல அமைத்து 108 ச்லோகங்கள் இயற்றியுள்ளார். எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களில் ஆழங்காற்பட்டு, அவனை ஸேவிக்கும் பொழுது, ஸ்வாமியின் திருவுள்ளத்தில் எழுந்த எண்ணங்களே தயாசதகமாக உருவெடுத்தது. இது ஸ்வாமியே இந்த ஸ்தோத்ரத்துக்கு இட்ட திருநாமமாகும்! இதன் அமைப்பு ஒப்பற்ற ஒரு தெய்வச் செயலாகவே திகழ்கிறது.

**தயையின் சிறப்பு**

எம்பெருமானைப் போன்றே அவனுடைய தயையும் அத்விதீயமானது. இந்த அழகான ஸ்தோத்ரத்தைக் கற்றதும் **ஸ்ரீதேசிகனைக் காட்டிலும் சிறந்த கவி இல்லை, தயையைக் காட்டிலும் சிறந்த குணம் இல்லை** என்றே நமக்கும் அறுதியிடத் தோன்றுகிறது! இந்நூல், விசிஷ்டாத்வைதத்தை விளக்குவதாகவும், சரணாகதி சாஸ்த்ரமாகவும் ஸ்தோத்ர நூலாகவும் சான்றோர்களால் கொண்டாடப்படுகிறது! பெருமாளிடம் உள்ள ஜ்ஞானாதி ஆறு குணங்களில், ஜ்ஞானம் என்னும் குணம் ஜய கோஷம் இட்டுக்கொண்டு தயாதேவியின் முன்னே செல்வது போலவும் மற்றைய குணங்களான பலம், ஐஸ்வர்யம், சக்தி, தேஜஸ், வீர்யம் இவைகள்



தயையைப் பின் தொடர்வதாகவும் அழகிய ஊர்வலம் ஒன்றையே சித்தரித்துக்காட்டி இதன் உயர்வை ச்லாகிக்கிறார் ஸ்ரீ தேசிகன். மேலும், தயை என்னும் குணம் எம்பெருமானிடம் இல்லா விட்டால் மற்றைய குணங்களெல்லாம் பகலில் காயும் நிலவு போல வீணானதே என்கிறார் ஸ்வாமி!

ஸ்ரீநம்மாழ்வார், **புகலொன்றும் இல்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே** என திருமலையப்பனிடம் சரண் புகுந்தாற்போல் ஸ்ரீ தேசிகனும், தம் முதல் ச்லோகத்திலேயே, **ப்ரபத்யே தம் கிரிம்** என்று மலையை சரண் புகுந்து வணங்குகிறார். எம்பெருமானிடம் இயற்கையாகவே பூர்ணமாக உள்ள தயை என்னும் குணம், கரும்பின் இனிய சாறு போலப் பெருகி, கற்கண்டுக் கட்டியாகி, மலையென நிற்பதாகக் கூறி, அம்மலையையே முதலில் வணங்குகிறார்! திருமலை மற்றும் திருமலையப்பனின் ஜகம் புகழும் பெருமைக்குக் காரணம், அவனிடம் உள்ள தயை என்னும் குணமேயன்றோ!

**நூலின் சிறப்பு**

ஸ்ரீ நம்மாழ்வார் மேல் கொண்ட பக்தியாலும், அவர் அருளிச்செய்த ஸ்ரீஸூக்தியின் மேல் கொண்ட ஈடுபாட்டாலும், இந்த தயாசதகத்தின் 100 ச்லோகங்களிலும், திருவாய் மொழியின் 10 பதிகங்களில் காணப்படும், எம்பெருமானின், திருக்கல்யாண குணங்களை அழகாக ஸ்ரீ தேசிகன் விவரித்திருப்பது அநுபவித்து மகிழ வேண்டிய ஒன்று!

இதை வரிசையாகப் பார்க்கலாம்.

1) **ஸேவிக்கத்தகுந்தவன்**
கமப்யநவதிம்... உபாகதம் (9)

2) **போக்யமானவன்**
ரூடா வ்ருஷாசலபதே:... கராபசேய பலை: (19)

3) **திவ்ய மங்கள விக்ரஹம் உடையவன்**
கலசோததி... அஞ்ஜநாசலேந்தோ: (22)

4) **போக்யமான வஸ்துக்களைக்காட்டிலும் மேம்பட்டவன்**
பரிமித... நிர்விசந்தி: (39)
த்வயி பஹுமதிஹீந:... பிபாஸாம் (40)

5) **புருஷார்த்தங்களைக் கொடுப்பவன்**
ச்ரேயஸ்ஸூதிம்... தத்ப்ரயுக்தை (49)

6) **ப்ரபத்தி என்னும் உபாயத்தால் அடையத் தகுந்தவன்**
அதிக்ருபணோபி... நித்ய தநீ (51)
த்வதுதய... பரந்யாஸநாததிகம் (59)
ம்ருது ஹ்ருதயே -- ஹராம் லஹரீம் (60)

7) **அநிஷ்டங்களைப் போக்கும் தன்மையுடையவன்**
அகூபரைரேகோதக... ப்ரபவஸி (61)



8) **ஆச்ரிதர்களின் மனதுக்கு ஏற்ப நடப்பவன்.**
அதிவிதிசிவை: ... வ்ருஷாத்ரி பதே: பதம் (75)

9) **அனைவருக்கும் நன்மை செய்யும் ஸ்வபாவமுடையவன்**
ப்ரஸக்த மதுநா... பங்கஜேநாங்கிதம் (85)

10) **ஜீவர்கள் பரமபதம் செல்லும் போது, ஸஹாயமாய் இருப்பவன்**
விஜ்ஞாத சாஸந... தரத்வலீலாம் (93)
விக்ஷேபமர்ஹஸி... குணவாகுராத்வம் (95)

இந்த குணங்களெல்லாம் எம்பெருமானிடம் நிறைந்திருப்பதன் காரணம், தயாதேவியின் இன்னருளே என்று ஸ்ரீ தேசிகன் 100 ச்லோகங்களிலும் விரிவாகக் காட்டியுள்ளார்.

இவற்றுள், மிகவும் முக்யமானதும், சரணாகதியின் உயர்வை வலியுறுத்துவதாகவும் அமைந்துள்ள ஒரு ச்லோகம் பல விதரணதக்ஷம் —மாமகாநாம் (33) என்பதாகும்!

இதன் மூலம் அழகான, ஆச்சர்யமானதொரு நீதிமன்றத்தை நம் கண் முன்னே நிறுத்துகிறார் ஸ்ரீதேசிகன். ப்ரபத்தி என்னும் உபாயத்தால்

## Special programmes for Purattasi @ Sri Vedantha Desikar Devasthanam, Mylapore, Chennai

**Oct. 7 (Sat), 6 p.m.: 'Bhaje Pandurangam'**
**Harikatha by**
**Smt. Suchithra Balasubramanian**
Sri Kowshik - Harmonium
Sri M.S. Venkatasubramanian - Mrudangam

**Oct. 14 (Sat), 6 p.m.:**
**'Swami Desikan Charithram'**
**Harikatha by**
**Smt. Suchithra Balasubramanian**
Sri Kowshik - Harmonium
Sri M.S. Venkatasubramanian - Mrudangam

**Oct. 15 (Sun), 6 p.m.: Navarathri Celebrations**
**Vocal concert by**
**Kalyanapuram Sri Aravind Soundararajan**
Vaibhav Ramani - Violin
Kishore Ramesh - Mrudangam

அடையப்படுபவன் ஸ்ரீ வேங்கடேசன் என்ற உயரிய கருத்தைக் காட்டுகிறார்.

தன்னை பாபம் செய்த ஒரு அபராதியாக குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி, பின்னர் தயாதேவியின் மூலம் தான் தண்டிக்கப்படாமல் வெளிவந்ததைக் காட்சியாகக் காட்டுகிறார். 'பாபங்கள் எல்லாம் நான் குற்றவாளியென்றும், தண்டிக்கப்பட வேண்டியவன் என்றும் வாதாடுகின்றன. பக்ஷபாதம் அறியாத திருவேங்கடமுடையான் நீதிபதி ஸ்தானத்தில் உள்ளான். பெரிய பிராட்டி உதவி நீதிபதி. பெருமானின் ஆறு குணங்களும். வாதத்தைக் கேட்டு, தங்கள் அபிப்ராயத்தைச் சொல்லும் நடுவர் மன்ற அங்கத்தினர்களாக (Members of Jury) உள்ளனர். எனக்காக வாதிட யாரும் இல்லாத நிலையில், தயாதேவியே! உன் கருணையினால், எனக்காக வாதாடும் வழக்கறிஞராய் நீ வந்தாய். வாதிகள் சொன்ன வாதங்களையெல்லாம், சாஸ்த்ரம் என்னும் சட்டத்தால் நிராகரித்து, நான் செய்த ப்ரபத்தியினால், என் பாபங்கள் மன்னிக்கப்பட்டு விட்டதாகவும், என் மேல் குற்றமில்லை என்றும் வாதாடிய மஹா உபகாரி நீ! ஜயம் கொண்ட தயாதேவியே! என்னைக் காத்தருளினாய்' என்று நன்றி தோன்றப் பாடுகிறார் ஸ்வாமி.

இதன் மூலம் பாவமே செய்து பாவியாகி நிற்கும் நமக்கு சரணாகதி சாஸ்த்ரத்தை வலியுறுத்தி, நாம் எல்லோரும் அதைப் பின் பற்றும்படி அறிவுறுத்தும் அத்புதமான ச்லோகம் இது!

விண்ணவர்கோனாகிய பகவான் மண்ணவர்களுக்கு அருள்புரிய கருணையுடன், அதாவது தம் தயாதேவியுடன் இறங்கி வந்து நின்ற இடம் இந்தத் திருவேங்கடமலையே! தன் குளிர்ந்த கண்களால் சுற்றும் கடாக்ஷித்து, தான் உகந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து, **அர்ச்சா மூர்த்தியாய்** பல திருத்தலங்களிலும் எழுந்தருளினான்! அதுபோல் சேதனர்களை உஜ்ஜீவிக்கச் செய்வதற்காக, தயாதேவியின் தூண்டுதலால் எம்பெருமான் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து அவதாரம் எடுத்து விபவமாகவும் இறங்கி வந்த மஹிமையை ச்லோகம் 81 முதல் 90 வரையிலும் வர்ணிக்கிறார்.

தசாவதாரங்களையும் துதிக்கவென்றே ஸ்வாமி அருளிச்செய்தது **ஸ்ரீதசாவதார ஸ்தோத்ரம்.** இதன் முதல் ச்லோகத்தில், **தேவோ ந: சுபம் ஆதநோது** எனத்தொடங்கி ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தை நாடக மேடையாக்கிக் கொண்டு, 10 விதமான வேடங்களை அணிந்து, பெரிய பிராட்டியாரோடு நாடகம் நடத்துகிறான் பெருமான் என்று வர்ணிக்கிறார் ஸ்ரீ தேசிகன்! **தயாசதகத்தில்** பத்து அவதாரங்களையும் புதியதொரு கோணத்தில் காட்டுவதுடன், இந்த அவதாரங்கள் எல்லாம் எம்பெருமானின் அளப்பரிய கருணையினால், அதாவது தயாதேவியின் திருவருளாலேயே நிகழ்ந்ததாக தயாசதகத்தில் குறிப்பிடுவது அத்புதமானது!

ச்லோகம் 81: **க்ருபே விகத வேலயா...** அவதாரங்களில் பெருமான் தர்ம பரிபாலனம் செய்ய தயாதேவி உதவுகிறாள்'' என்றும் கலியின் வெப்பம் தாங்காமல் தவிக்கும் சேதனர்களுக்கு, கருணையையே ஸ்வபாவமாகக் கொணட பெருமான், மழை பொழியும் மேகமாக அவதாரம் எடுத்து, தாபத்தைத் தணிக்கிறான்.

ச்லோகம் 82: **ப்ரஸூய விவிதம்...** தயை என்னும் குணத்தின் காரணமாக பகவான் மத்ஸ்ய, கூர்மாதி அவதாரங்கள் எடுக்கிறான். மீன்கள் தன் குஞ்சு களைக் கண்களால் காப்பது போல, பெருமானும் தன் குளிர்ந்த கண்களால் கடாக்ஷிக்கிறான். கூர்மம் சிந்தனை செய்தே தன் குட்டிகளைக் காப்பது போல, ''உறங்குவான் போல் யோகு செய்யும் பெருமான்'' சேதனர்களின், ரக்ஷண காரியத்தை சிந்திக்கிறான்.

ச்லோகம் 83: **யுகாந்த ஸமயோசிதம்...** ப்ரளய காலத்தில், பாதாளத்தில், அமிழ்ந்திருந்த பூமிப்பிராட்டியின் அல்லலை நீக்க எண்ணிய தயாதேவி, ஸர்வலோக நியந்தாவான பெருமானை, வராஹ அவதாரம் எடுக்கச்செய்தாள். பெருமான் தன் கோரைப் பற்களால் பூமியைப் பிளந்து, பிராட்டியைத் தூக்கி வெளிக் கொணர்ந்தான்.

ச்லோகம் 84: **ஸடாபடல பீஷணே...** அத்புதமானதொரு அவதாரம்! நரம் கலந்த சிங்கம்! பயம் ஒரு புறம். அபயம் மறு புறம். கோபமும். அனுக்ரஹமும் சேர்ந்ததொரு கலவை. பகவானின் அகடிதகடநா சாமர்த்யம் இந்த அவதாரத்தின் சிறப்பு, சத்ருவை ஸம்ஹரித்த பிறகு, பக்தனைக் கண்டதும் தயா ஸ்வரூபமாக மாறியதே அத்திருமேனி! சேராததை சேர்த்து வைத்தவள் தயாதேவியே!

ச்லோகம் 85: **ப்ரஸக்த மதுநா...** வாமனனாய் வந்து, பின் த்ரிவிக்ரமனாய் ஓங்கி உலகளந்து தன் வேத மணமிக்க திருவடிகளால் மூவுலகையும் அளந்து, அனைவரின் சிரஸ்ஸிலும் திருவடி முத்ரையைப் பதிக்கும்படி செய்தது தயையின் காரியமே.

ச்லோகம் 86: **பரச்வத தபோதந...** ஆவேசம் நிறைந்த க்ஷத்ரிய குலத்தை வேறுடன் களைந்த பரசுராம அவதாரம். பெருமான் இந்த அவதாரத்தில் செய்தது தர்ம காரியமே. அவர்களை நற்கதி அடையச் செய்ததும் தயாதேவியின் இன்னருளே.

ச்லோகம் 87: **க்ருபே க்ருத ஜகத்திதே...** ஆச்ரிதர்களுக்கு வசப்பட்டவன் ஸ்ரீ வேங்கடேசப் பெருமான். அவனே தயாதேவிக்கும் வசப்பட்டவன். ''உமதடிகள் அடைகின்றேன்'' என்று ஒருமுறை உரைத்தவரைக் காப்பதே தன் வ்ரதமாகக் கொண்டவன். மனத்துக்கினியனான ராமபிரானை சரணாகதி ரக்ஷணத்திற்கு ப்ரஸித்தமான வம்சத்தில் அவதாரம் எடுக்கச் செய்தாள் தயாதேவி.

ச்லோகம் 88: **க்ருபே பரவதஸ்த்வயா...** வலிமை மிக்கவனாக, கண்ணபிரானுக்கு மூத்தவனாக, பலராமனை அவதரிக்கச் செய்தாள் தயாதேவி. அசுரர்களைக் கொன்ற பலராமன் செய்த லீலைகள் அனைத்தும் உலகிற்கு நன்மையையே செய்தன.

ச்லோகம் 89: ப்ரபூத விபுதத்விஷத்... மண்ணின் பாரம் நீங்க வட மதுரையில் க்ருஷ்னனாய் அவதரித்தான். காலநேமி, கம்ஸன், சிசுபாலன் போன்ற துஷ்டர்களைக் கொன்றதன் மூலம் பூமி பாரம் நீங்கியது. அஜ்ஞானம் என்னும் இருளில் மூழ்கிக் இடந்த சேதனர்களை உஜ்ஜீவிக்க, தன் திருப்பவள வாயினின்றும், திவ்ய ஸூக்தியான பகவத்கீதை என்னும் அற்புதமான அகண்ட விளக்கை ஏற்றி வைத்து, ஜ்ஞானம் ப்ரகாசிக்கச் செய்தான்.

ச்லோகம் 90: **வ்ருஷாத்ரி ஹயஸாதிந:...** கலியுகத்தின் முடிவில் , பரிமேலழகராக ஸ்ரீ வேங்கடேசன் எடுக்கப் போகும் அவதாரம் கல்கி! கையில் கத்தியுடன், வெள்ளைக் குதிரையின் மேலேறி வருவான் பகவான். தயாதேவியே கத்தி உருக்கொணடு, பெருமானோடு கூடி, துஷ்டர்களை நிரஸனம் செய்து, தர்ம பரிபாலனம் செய்வாள். பின்பு புதிதாக க்ருத யுகம் தொடங்கும்.

இந்த 10 அவதாரங்களைப் பற்றி 10 அத்புதமான ச்லோகங்களை இவ்விடத்தில் தனித் தனியாக இயற்றி யிருந்தாலும், ஸ்ரீ தேசிகன், தம் தசாவதார ஸ்தோத்ரத்தில் ஒரே ச்லோகமாக எல்லா அவதாரங்களையும் இணைத்துப் பாடியிருப்பது, அவரது கவித்திறனுக்கு ஒர் அழகான எடுத்துக்காட்டு. இச்சாமீன விஹார.... எனத்தொடங்கி அருளிச் செய்துள்ள இந்த ச்லோகம் மிக அத்புதமானதாகும்! அதன் பொருள்:

1) தானே ஸங்கல்பித்து, மத்ஸ்ய அவதாரம் செய்த பிரான்.
2) மந்தர மலையை மத்தாகக் கடைந்து விளையாட ஆமையாய் நின்றவன்.
3) உலகம் முழுவதும் சூழ்ந்து நிற்குமாறு பெரிய வராஹமாகத் தோன்றியவன்.
4) எதிர் பாராமல் அப்போதே தோன்றிய ந்ருஸிம்ஹன்.
5) வாமனனாகத் தோன்றி ஓங்கி உலகளந்த த்ரிவிக்ரமன்.
6) க்ஷத்ரியகுலம் அழியக் காரணமான ஆவேச பலராமன்.
7) மனத்துக்கினியவனாய், தயை மற்றும் மன்னிக்கும் குணம் கொணட ராமன்.
8) கலப்பையைக் கொணடு பல லீலைகள் செய்த பலராமன்.
9) ஆயர் குலத்தில் தோன்றி பல அத்புத சேஷ்டிதங்கள் செய்த கண்ணபிரான்.
10) வெண் குதிரை ஏறி, கத்தியைக் கைக் கொண்டு, தர்மத்தை நிலை நிறுத்த வரப் போகும் கல்கி பகவான்.

**முடிவுரை**

இப்படி தயாசதகம் முழுவதிலும் பற்பல தத்வார்த்த விஷயங்களையும், விசிஷ்டாத்வைத கோட்பாடுகளையும், சரணாகதி தத்துவங்களையும் அதி அற்புதமாக, ஸ்ரீ தேசிகன் அமைத்து நமக்குக் கொடுத்திருப்பது, தெளியாத மறை நிலங்களை நாம் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே.

தயாதேவியின் துணை கோண்டு, எம்பெருமான் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் மேல் இயற்றப்பட்ட இந்த ஸ்தோத்ரத்தை தினமும் பாராயணம் செய்து அருளே வடிவெடுத்த திருமலையப்பனின் திருவருளையும் இவ்வருளைக் கொண்டாடும் அருளாளராகிய நம் ஆசார்யோத்தமரின் திருவருளையும் ஒருங்கே பெறலாம் என்பது நாம் பெற்ற நற்பேறு!

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (6)

## The salient ones in numbers

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

The philosophy of Visishtaadhvaita as envisioned and established by Bhagavath Ramanuja through his masterpiece Sri Bhashyam, a commentary on Veda Vyasa's Brahma Suthras, extols Sriman Narayana (that is, the union of Narayana and Lakshmi) as the Primordial cause and Supreme Reality.

There are two other prominent Vedantha philosophies — Advaitha of Adhi Sankara and Dvaitha of Madhvacharya — which also have the Upanishads, Brahma Suthras and Bhagavath Gita as the cornerstones. The three together are called the Prasthaana Thrayam.

In Visishtaadvaitha, Acharyas play a crucial role by facilitating the elevation of the Jivathma. The Lord is the foremost of the Acharyas as the preaching descends on one-to-one basis. Nammazhwar (who is also held as an Acharya also), Nathamunigal, Aalavandhaar, Sri Ramanuja and Sri Vedantha Desika have made great contribution to the Sampradaya.

We shall see the gist of important features of the Vedantha philosophy, with special reference to Visithaadvaitha.

**Three Philosophies:** Advaitha (Adhi Sankara), Visishtaadvaitha (Sri Ramanuja) and Dhvaita (Madhvacharya).

**Three Common Authorities (Prasthaana Thrayam):** Upanishads, Brahma Suthras and Bhagavath Gita are the commonly-accepted authorizes of all Vedhantha philosopies.

**Four Vedas:** Rug, Yaju, Sama and Atharva.

**Six Vedangas:** Siksha (phonetics and phonology), Chandhas (meter), Vyakarna (grammar), Niruktha (etymology), Jyothisha (astrology and astronomy) and Kalpa (ritual).

**10 Important Upanishads:** Isavasya Upanishad, Kena Upanishad, Kata Upanishad, Prasna Upanishad, Mundaka Upanishad, Mandukya Upanishad, Thaithiriya Upanishad, Aithreya Upanishad, Chandhogya Upanishad and Bruhadhaaranyaka Upanishad.

**Four Yugas:** Krutha, Thretha, Dwaapara and Kali.

**Four Varnas:** Brahmana, Kshathriya, Vaisya and Sudhra are the four sects of the mankind.

**Four Asramas:** Brahmachari, Gruhastha, Vaanaprastha and Sanyasi are the four stages of life.

**Smruthis:** These are Codes of Conduct to be adhered to by the people of different Varnas in different Yugas. Manu, Sandilya, Parasara, Yagyavalkya and Haritha are some of the sages who have authored Smruthis.

**Two Ithihasas:** Ramayana and Mahabharatha.

**18 Puranas:** These are divided into three groups — Saathvika, Raajasa and Thaamasa Puranas. **Saathvika Puranas:** Vishnu Puranam (considered as the Purana Rathnam), Srimath Bhagavatha Puranam, Naarada Puranam, Paadhma Puranam, Varaha Puranam and Garuda Puranam. **Raajasa Puranas:** Vaamana Puranam, Brahma Puranam, Markandeya Puranam, Bhavishya Puranam, Brahmaanda Puranam and Brahmavaivartha Puranam. **Thaamasa Puranas:** Mathsya Puranam, Koorma Puranam, Agni Puranam, Linga Puranam, Siva Puranam, Skandha Puranam.

**Five Forms of the Lord Supreme:** Para (in Sri Vaikuntam), Vyuha (in ThirupPaarkadal and Vasudeva, Sankarshana, Pradhyumna and Anirudhdha), Vibhava (the Avatharas), Antharyami (in the heart of every Jivathma) and Archa (in temples).

**12 Sub-Vyuha Forms:** Kesava, Narayana, Madhava, Govinda, Vishnu, Madhusudhana, Thrivikrama, Vamana, Sridhara, Hrishikesa, Padmanabha and Damodara.

**10 Avatharas:** Mathsya, Koorma, Varaha, Nrusimha, Vamana, Parasurama, Rama, Balarama, Krishna and Kalki.

**Acharya Parampara:** Sriman Narayana, Lakshmi, Vishvaksena, Nammazhwar, Nathamunigal, UyyakKondaar, Manakkal Nambi, Aala Vandhaar, Periya Nambi, Sri Ramanuja, … Sri Vedantha Desika, and so on.

**Three Thathvas:** Chith (sentient), Achith (non-sentient) and Iswara (God) are the three Realities.

**Three Rahasyas:** Moola Manthram, Dhvayam and Charama Sloka are the three Secrets.

**Two Means of Salvation:** Bhakthi (devotion) and Prapaththi (Surrender) are the only means.

**Three Yogas:** Karma Yoga, Jnana Yoga and Bhakthi Yoga.

**Five Senses of Knowledge:** Eye, Ear, Nose, Mouth and Skin are the Jnana Indhriyas.

**Five Senses of Action:** Tongue, Hand, Leg, genital and Anus are the five Karma Indhriyas.

**26 Realities:** 1. Moola Prakruthi, 2. Mahath, 3. Ahankaara, 4 to 8. The five Thanmaathras or the Subtle Elements (sound, touch, sight, taste and smell), 9 to 13. The Pancha Bhuthas or Gross Elements (ether, air, light, water and earth), 14. Manas (the Mind), 15 to 19. Jnana Indhriyas or the five senses of knowledge (ear, tongue, eye, nose and skin), 20 to 24. Karma Indhriyas or the five senses of action (mouth, hand, foot, genital and anus), 25. Jeevan and 26. Iswaran are the Thathvas.

**Three Qualities of Nature:** Sathva (that is noble and leads to happiness), Rajas (that is mediocre and leads to restlessness) and Thamas (that is undesirable and leads to indolence and evil) are the qualities of Prakruthi.

***(to be continued…)***


**ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு**

பித்ரு காரியங்கள் செய்வதற்கு,
சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச்
சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள்
வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான
அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி: 044-2495 3799.

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners ⑥

Smt. Padmalatha Sridharan, Chennai

**Chapter-5**

**Thathva-thraya Chinthana Adhikaram**

The three Nitya Thathvas are to be learnt thoroughly by a Mumukshu so that he doesn't have Dehathma Bhramam (thinking his body as his soul), Svathanthrathma Bhramam (thinking he is an independent entity), misconceptions regarding Isvara, etc.

The concepts explained here by Swami Desikan are very profound and require a deep analytical study. I will restrict myself to essential points which will give a basic idea about these three Thathvas. Swami's greatness is such he has condensed the essence of the concepts in Sri Bashyam, Nyaya Sidhdhanjanam, etc., to a few sentences. However, these have to be learnt from a Sampradayic Acharyan in Kalakshepam mode to be understood fully and properly.



The three Nitya Thathvas are Isvara, Chethanam & Achethanam. Chethanas are of three types -- Badhdhar, Mukthar and Nithyar. Achethanam is further divided into three, namely, Thrigunam or Moola Prakruthi (made of Sathvam, Rajas & Thamas), Kaalam (time) and Suddha Sathvam. (pure Sathvam without Rajas and Thamas). Dharma Bhootha Jnaanam is also Achethanam, but it is an attribute of Chethana (he is Chethana because he has Dharma Bhootha Jnaanam) and hence it is not counted separately. Jnaanam can be loosely termed as consciousness.

Now, this chapter is essentially an expansion of Swami Aalavandhaar's saying -- Svadheena Thrividha Chethanachetana Svarupa Sthithi Pravruthi Bedham. The Svarupa (core being), Sthithi (continued existence) and Pravruthi (actions) of the three types of Chehtanam and Achethanam depend upon Isvara.

First, let us see Chethana. Chethana Svarupa itself is consciousness only. But it has an attribute of consciousness too which is called Dharma Bootha Jnaanam. Thus, Chethana has two Jnaanams -- Dharmi Jnaanam (Svarupa) and Dharma Bootha Jnaanam.

The qualities common to all Chethanas Prathyakthvam and Chethanathvam (consciousness). Prathyakthvam is to cognise something directly without needing any other Jnaanam. One cognises oneself without any separate awareness needed. This is difficult to explain but could be put in Tamil as "Thanakku Thaan Thotrugai or Thanakku Thane Prakasippathu" i.e., as, "Naan" or "I". Since Svarupam is Prathyak, the consciousness "I" continues even when the quality of consciousness (Dharma Bootha Jnaanam) is dormant. For example, when we sleep, the "I" consciousness subsists but not exemplified by Dharma Bootha Gnanam. When we wake up, we say "I slept well". Even though there is no cognisance of other things during deep sleep the "I" consciousness continues.

Though Svarupa is same for all Chethanas, differentiation is due to quality of consciousness or Dharma Bootha Jnaanam. Devas have it more, Manushyas much less, while it is contracted in animals and practically non-existent in trees and plants.

The Sthithi (existence) of Chethanas is self-evident, Badhdhars exist in Samsara (cycle of births/deaths), Mukthars' Samsara has ended and Nithyars eternally exist in Vaikuntam.

The Pravruthis of three types of Jeevas are different. Badhdhars use their Sariram for

worldly activities. Mukthars have realised the dependence and subservience inherent in their Athma and hence have adopted the means or Upaaya and they do Kainkaryam in Vaikuntam (with or without Sariram). Nithyars have specific Kainkaryams (Garuda for transport etc).

Swami goes on to explore the Svarupa, Sthithi, Pravruthi of Dharma Bootha Jnaanam. The quality of consciousness is all-pervading for Isvara and Nithyars. It's contraction in other Chethanas, which results in them taking births in four forms. For Mukthars, the contraction has been removed and they have become all-pervading. The basic Svarupa of this quality of consciousness is to illuminate things to the bearer. (Svasraye Svayamprakasam). The Sthithi is evident, i.e., expansion and contraction as per birth in Badhdhars. It is dormant while Chethana is asleep or in a state of coma, etc. The Pravruthi of this consciousness is experiencing all things causing pleasure and pain for Badhdhars, divine experiencing of Isvara and all-pervading to cognise the whole Jagath simultaneously like Isvara for Mukthars and Nithyars.

Here swami, makes a small point that all creation is, by nature, beneficial only and this consciousness cognising something as harmful is due the Karma of its bearer.

Now for the three types of Achethanam – First is Moola Prakruthi or Gross Matter. Second is Time (past-present-future). These two are called Jadam or non-luminant. Nithya Vibuthi is luminant or Svayamprakasam. It is not cognised by us because it is luminant to only those who come into contact with it. (Sva Sambandhi Svayamprakasam).

The Thrigunas when they are in a state of equilibrium cause the deluge (Pralayam). Where there are bubbles of disequilibrium, creation happens. From this Moola Prakruthi, Mahath is created, from it thamas, then Pancha Boothas, sense organs and so on. The twenty-four Thathvas thus created make up this world which Chethanas experience. These Thathvas are visualised as ornaments and armaments of Bhagavan in Saastras. The Svarupa and Sthithi of each of these Thathvas are different. The boundary of this Moola Prakruthi is Nithya Vibhuti or Vaikuntam, meaning it extends thus far. The Pravruthi is the constant evolving of Moola Prakruthi to enable experiences of Bhadhdhars and serves as Leela Rasam for Bhagavan.

Nithya Vibuthi's Svarupa is uncontaminated Sathvam (no Rajas or Thamas) and this matter makes up the various trees, plants, creepers, ponds, palaces, temples, throne, etc., in Srivaikuntam. Mukthars and Nithyars use this variable matter for their Kainkaryams. Sthithi is eternal. Pravruthi is facilitating these Kainkaryams and serves as Bhoga Rasam for Bhagavan.

The Svarupa of Time is non-luminant and all-pervading. There are limiters for Time in this world like seconds, minutes, hours, days, months, years etc., but Sthithi is eternal. These limiters are not present in Nithya Vibuthi. Pravruthi is facilitating creation in world.

All these Thathvas depend, for their existence, on Bhagavan's Will.

Now for Isvara Thathvam - His Svarupa is Satyam (eternal truth), Gnanam (all-pervading consciousness), Anantam (all-pervading being), Aanandam (pure bliss) and Amalam (immune to blemishes). After this Svarupa is established, qualities are proved like mercy, grace, munificence etc. The five forms Para, Vyuha, Vibhava, Antaryami and Archavatara are explained by Swami next. Swami then avers that meditating upon the Vibhava Avatarams could result in moksha in the same Janma without delay and Archavatara can and will grant Moksha. Isvara in conjunction with Piratti is the cause for creation, sustenance, destruction, and moksha. But Piratti has voluntarily taken up the role of Purushakaaram (recommending Jeevas for Moksha) separately. She insists upon Perumal to absolve the Jeevas' sins and hence we surrender unto Her first before Him.

Swami emphasises that one need not become an expert on all these Tattvas but learn just enough to redeem one's self to attain Moksha and gives the analogy of a sailor in a small boat, who knows his sea-route alone and does not stray into unchartered waters, only to get lost in the big ocean. Thus, it is better for a Mumukshu to learn these three Tattvas thoroughly and desist from wasting time and effort in unwanted sastras to attain Moksham without delay.

***(to be continued…)***



*With Pranams:*

**R. Srinivasan**
Block No. 6, 2B, Rani Meyyammai Towers,
MRC Nagar, Chennai - 600 028.
Mobile: 94452 02242.

**SVDD thanks Sri R. Srinivasan**
for sponsoring this month's issue of Desika Sandesam



கடை (ஆவணி) ச்ரவணம்







கடை (ஆவணி) ச்ரவணம்